நமது ஈழநாடு
www.namathueelanadu.com



குரல் 04 மலர் 39 செப்டெம்பர் 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



Simply Scan the QR code Your Phone Camera
Download the NamathuEelanadu app

*திலீபனின் தியாகம் இந்திய மாயையை கலைத்து தமிழ்த் தேசிய உணர்வை தட்டி எழுப்பியது*

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# திலீபன் நினைவுகள்

**திலீபனின் அரசியல் ஆசிரியர்**
**மு.திருநாவுக்கரசு**

மக்களின் நல்வாழ்விற்காகவும், அவர்களின் மேன்மைக்காகவும், உரிமைக்காகவும் தண்ணீர், வெந்நீர்கூட அருந்தாது திலீபன் தன்னுயிர் ஈந்த அந்த மண்ணில், இன்று தமிழ் இளைஞர்கள் குடிவெறிக்கு உள்ளாகி போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளார்கள் என்ற செய்தியானது பெரும் அதிர்ச்சியையும் வேதனையும் அளிக்கிறது. திலீபனைப் பற்றிய நினைவுகள் இத்தகைய இளைஞர்களுக்கு நல்வழி காட்டும் என்று நம்புவோமாக.

**'அவனை சாகவிட**
**விரும்பும் ஒவ்வொருவரும் அறிக**

அவனது பசி வலியது.
அவனது தாகமும் வலியது.
ஆனால் அவற்றிலும் வலியது
அவனது சனங்களின் கோபம்...'



என்று திலீபன் சாகும்வரையான உண்ணாவிரதம் இருந்து கொண்டிருந்த போது அவரது நண்பன் திரு. ம.நிலாந்தனால் எழுதி வெளிடப்பட்ட கவிதை அடிகளே இவை.

திலீபன் எனது அரசியல் மாணவன். பிள்ளையைப் பற்றி தாய்தந்தையர் புரிந்திருப்பதைவிடவும் அந்தப் பிள்ளையைப் பற்றி ஓர் ஆசிரியன் புரிந்திருக்கக்கூடியது அதிகம். ஆதலால் திலீபனைப் பற்றி நான் எழுதக்கூடிய குறிப்பு ஒருபுறம் இரத்தமும், தசையானதாகவும் மறுபுறம் அறிவியல் பரிமாணம் கொண்டதாகவும் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

திலீபனது சொந்தப் பெயர் பார்த்தீபன். எனக்குப் பல புனைபெயர்கள் உண்டு. அவற்றில் ஒன்றான 'திலீபன்' என்ற பெயரையே தனக்கான புனைபெயராக சூடிக் கொண்டான். திலீபன் என்ற புனைபெயரை நான் உணர்வுபூர்வமாக எனக்கு தேர்ந்தெடுக்கவில்லை. என்மீது அன்புள்ள ஒருவராக பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் விளங்கினார். எனது வெளியீடுகளையோ கட்டுரைகளையோ புனைபெயர்களில் எழுத வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு இருந்தது. இந்த வகையில் காலத்திற்குக் காலம் நான் பல புனைபெயர்களில் எழுதுவது வழக்கம். அந்தவகையில் எனக்கு ஒரு புனைபெயர் தேவைப்பட்ட தருணத்தில் சுப்பிரமணிய ஐயாவிடம் எனக்கு ஒரு புனைபெயர் சொல்லுமாறு கேட்டேன். அவர் முன்பின் யோசிக்காமல் இயல்பாகவே திலீபன் என்ற பெயரை வைக்குமாறு கூறினார்.

'திலீபன்' என்ற வடமொழிப் பெயரின் பொருள் 'இதயத்தை வென்றவன்' என்ற விளக்கத்தை அவர் என்னிடம் கூறியதுடன் காண்டேகர் எழுதிய 'கிரகஞ்சவதம்' என்ற நாவலில் வரும் கதாபாத்திரத்தின் பெயர் திலீபன் என்றும் அது தனக்கு மிகவும் பிடித்த பெயர் மட்டுமல்ல, நல்ல பாத்திரமும் என்று என்னிடம் கூறி அப்பெயரை வைக்குமாறு சொன்னார். அதன்படி திலீபன் என்ற பெயரில் சிறிதுகாலம் எழுதினேன். எனது இப்பேரின் வரலாற்றை அறிந்துகொண்ட திலீபன் தனக்கும் இப்பெயரை சூடவிரும்பி உணர்வுபூர்வமாக தேர்ந்தெடுத்துக் கொண்டான். உண்மையிலேயே தான் சூடிக்கொண்ட பெயருக்கேற்ப தன் வாழ்விலும் வரலாற்றிலும் மக்களின் இதயங்களை வென்றவனானான்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முதலாவது அரசியற் பொறுப்பாளரும் எனது மாணவனுமான சுகந்தனால் ' திலீபன் ' இயக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். சுகந்தன் யாழ் குடாநாட்டிற்கான அரசியற் பொறுப்பாளராக முதன்முறையாக நியமிக்கப்பட்ட போதிலும் நடைமுறையில் தமிழீழப் பகுதி முழுவதுக்குமான அரசியற் பொறுப்பாளராகவே இருந்தார். இதிலிருந்து முழு தமிழீழத்திற்கும், தமிழீழ மாவட்டங்களுக்கும் பொறுப்பான தனித்தனி அரசியல் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுதல் உருவானது. சுகந்தன் திறமையும் நேர்மையும் கண்ணியமும் சமூகப்பற்றும் அறிவாற்றலும் கொண்ட ஓர் இளைஞனாக காட்சியளித்தார். பல்கலைக்கழகத்தில் சகமாணவர்கள் மத்தியில் அவருக்கென தனித்துவமான மதிப்பு இருந்தது. சுகந்தனுக்கு அடுத்து 'கந்தையா அண்ணை' மேற்படி யாழ் மாவட்டத்துக்கான அரசியற் பொறுப்பாளராக நியமனமானார். இவரும் எனது அரசியல் மாணவராவார். 'சுகந்தன்' இராணுவத்தால் பிடிபட்டு சயனைட் அருந்தி தன்னுயிரை தியாகம் செய்து கொண்டான்.

சுகந்தனின் நண்பன் கந்தையா அண்ணைக்கு அடுத்து அப்பதவிக்கு 'திலீபன்' நியமிக்கப்பட்டான். திலீபனை 'கந்தையா அண்ணை' என்னிடம் கூட்டிவந்து பல்கலைக்கழக நூலக முன் மண்டபத்தில் வைத்து என்னிடம் அவர் புதிதாக பதவியேற்றுக் கொண்டதை அறிவித்தார்.

நாம் மூவரும் நூலகத்தைவிட்டு வெளியே வந்தோம். அது ஒரு மம்மலான மாலைப் பொழுது. ஆங்காங்கே பல்கலைக்கழக காதல் ஜோடிகள் கூடிப்பேசி மகிழ நிலையெடுத்துக் கொண்டிருக்கும் பின்னணியில் நாம் பல்கலைக்கழக சிற்றூண்டிச் சாலைக்குள் பிரவேசித்தோம். அங்கு பல மாணவமாணவிகள் விளையாடிக் களைத்துவிட்டு விளையாடிய உடுப்புடன் வேர்வை கசிய தேனீரும் கையுமாய் அட்டகாசத்துடன் களபுள என பேசிக்கொண்டிருந்தனர். நாம் ஓர் ஓரத்தில் அமர்ந்தோம். கொதிக்கும் தேனீரும் சுவைத்தபடி கொதிக்கும் அரசியலை பேசினோம்.

ணத்தைப் பந்தாடும் துயர்தோய்ந்த அரசியல் தான் காலத்தின் விதியென தெரிந்திருந்தாலும் திலீபனின் அப்பதவியேற்பு நல்லூர் வீதியில் நெருப்பாறாய் ஓடுவதில் முடியுமென்று அப்போது சிறிதும் நினைத்திருக்கவில்லை.

இலங்கை அரசியல் முற்றிலும் இராணுவமயமாகிவிட்ட காலம் அது. துப்பாக்கிகள் மட்டுமே பேசத் தொடங்கிவிட்ட காலம் அது. எங்கும், எதிலும், எப்போதும் துப்பாக்கிகளே நிர்ணயகரமான பாத்திரம் வகிக்கத் தொடங்கிவிட்ட காலம் அது.

இத்தகைய காலப் பின்னணியில் திலீபன் தண்ணீர் குடிக்காது சாகக்கூடும் என்று எண்ணிப்பார்க்க இடம் இருந்திருக்காத காலம் அது. தேனீர் வயிற்றுள் இறங்குகிறது. வார்த்தைகள் வெளியே வந்துகொண்டிருக்கின்றன. 'மிகவும் நெருக்கடி மிகுந்த காலத்தில் இந்தப் பதவியை ஏற்றுள்ளாய்' என்றேன். அப்போது அவன் கூறினான் 'உண்மைதான்', ஆனால் அதுமட்டுமல்ல 'என் வயதுக்கு மீறிய பதவியை பொறுப்பேற்றுள்ளேன்' என்று தன்னியல்புடன் கூறினான்.

திலீபனுக்கு தந்தையும் இரண்டு அண்ணாக்களும் இருந்தனர். தாய் இறந்துவிட்டாள். அவனுக்கு தாயின் அரவணைப்பும் கிடைக்கவில்லை பெண் சகோதரிகளும் இருக்கவில்லை. இதன் பின்னணியில் வளர்ந்த அவனிடம் தாய்மாரின் மீதும் பெண்கள் மீதும் எப்போதும் தனித்துமான மதிப்பும் அன்பும் இருந்தது. அவன் இயல்பில் ஒரு தூய்மைவாதியாக காணப்பட்டான். புகைத்தல், மதுப்பழக்கம் என்பன சிறிதும் இல்லாதவன் மட்டுமல்ல, அதனை ஒரு கொள்கையாகக் கொண்டு அத்தகைய தீய பழக்கங்களை எதிர்த்தும் வந்தான். அத்துடன் பெண்களுக்கென அவனது மனதில் ஒரு புனிதமான இடம் முழுமையாகவே இருந்தது. அவனுடன் அதிகம் நெருங்கிப் பழகிய ஓர் ஆசிரியன் என்ற வகையில் இவற்றை என்னால் முற்றிலும் அறுதியிட்டுக் கூறமுடியும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பத்தில் பெண்களை போராட்டத்தில் இணைத்துக் கொள்ளாத ஓர் அமைப்பாகவே இருந்தது. ஆனால் பெண்கள் இணைத்துக் கொள்ளப்படுவதாக முடிவெடுக்கப்பட்டதும் அந்த பெண்கள் அமைப்பிற்கான இரகசிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு உரும்பிராயில் தோட்டப் பகுதியில் புதிதாக கட்டப்பட்ட வீட்டில் அவர்களுக்கான கூட்டத்தை திலீபன் கூட்டியிருந்தார்.

ஆனால் இதற்கு முன்பே பெண்கள் போராட்டத்தின் மீது அக்கறை கொண்டவர்களாய், இயக்க அனுதாபிகளாய் ஆங்காங்கே அரிதாக செயற்படத் தொடங்கியிருந்தனர்.

திலீபன் அறிவியல் மீது ஆர்வம் கொண்டவன். திறமை மிக்கவன், சமூகப் பற்றுள்ளவன், பண்பாட்டை நேசிப்பவன், கண்ணியமானவன், விடுதலைவிரும்பி, அர்ப்பணிப்பு மிக்கவன், அயராது செயற்படும் இயல்புள்ளவன், அவனது மணிக்கூட்டில் இரவு என்பது இருக்காது. என்னை அவன் இரவு ஒரு மணி, இரண்டு மணி பல வேளைகளில் அதைத்தாண்டியும் சந்திக்க வருவான். அவன் அடிப்படையில் ஒரு தூய்மைவாதி. இவை அனைத்தும் ஒருபுறம் இருக்கும் போது மறுபுறம் முற்கோபமும் அவசர புத்தியும் கொண்டவன். எல்லாவற்றிற்கும் அப்பால் சமூக நல்லுணர்வுடன் எதற்கும் முன்போகும் இயல்பு கொண்டவன். விளையாட்டிலும் ஆர்வமுள்ளவன். குறிப்பாக சதுரங்க விளையாட்டில் திறமையுள்ளவன் என்று எனக்கு சொல்லப்பட்டது. ஆனால் அது பற்றிய நேரடி அனுபவங்கள் என்னிடம் இல்லை.

அவன் சிறப்பாக மேடையில் உரையாற்றுவான். சொற்களை அழுத்தம் திருத்தமாக பொருள் உணர்ந்து உச்சரிப்பான். பேச்சில் ஒரு கவர்ச்சியிருக்கும். அதற்காக அது இயல்பை மீறியதாக இருக்காது. இலகுவில் யாருடனும் பழகுவான். பழக இனிமையானவன். திலீபனுக்கும் எனக்கும் இடையில் அவ்வப்போது ஏதாவது முரண்பாடுகள் ஏற்படுவது இயல்பு. அநேகமாக என்னை அவன் சந்திக்காத வாரம் என்று எதுவும் இருக்காது. ஒருநாள் எனக்கும் அவனுக்கும் இடையில் முரண்பாடு ஒன்று ஏற்பட்டபோது ஒரு மாதமாக என்னை அவன் சந்திக்கவில்லை. ஆனால் அவனுக்கும் எனக்கும் இடையில் உள்ள அன்பு ஆழமானது என்பதால் என்னிடம் இருந்து அவன் அதிககாலம் விலகியிருக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்.

ஒருமாதம் கழித்து யாழ்.பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்கு முன்னால் நான் வந்துகொண்டிருக்கும் போது எதிரே வாகனத்தில் வந்துகொண்டிருந்த திலீபன் என் முன் வாகனத்தை நிறுத்தினான். இருவருக்கும் இடையேயான கோபம் ஆறியிருந்தது. 'வாங்கோ நானும் வாறன். ஐயர் கடையில் தேனீர் குடிப்போம்' என்றான். அதிகம் தேனீர் குடிக்கும் பழக்கமுள்ள நான், அதுவும் ஐயர் கடையை தாண்டும் போது கண்டிப்பாக நான் தேனீர் குடிப்பேன் என்பது திலீபனுக்குத் தெரியும். அதேவேளை ஒருமாதகால கோபத்துக்கு மருந்தாக அவன் தேனீரை தெரிவு செய்துள்ளான் என்பதையும் உணர்ந்து எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

திலீபனுக்கு பெண்கள் மீது இருந்த அதியுயர்ந்த மதிப்பும் மற்றும் போதைப் பொருட்கள் மீது அவனுக்கு இருந்த பெருவெறுப்பும் அப்பழுக்கற்றவை. திலீபனது இந்த நினைவுநாட்களில் அத்தகைய நினைவின் பேரால் போதைப் பொருள் பாவனையை கைவிடவும், அத்தகைய தீயபழக்கத்தை எதிர்க்க முனைவதுமே திலீபனுக்கு இளைஞர்கள் செலுத்தக்கூடிய காணிக்கையாகும்.

தற்போது முழு இலங்கையிலும் அதிகூடிய மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனை கொண்ட மாகாணமாக வடமாகாணம் காணப்படுகின்றது என்ற செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக மட்டுமன்றி அது எமது பண்பாட்டு இதயத்தின் மீது விழுந்த ஒரு பேரிடியாகவும் காணப்படுகிறது.

திலீபனும் அவனது நெருக்கமான சகாவான ராஜனும் என்னை திடீரென சந்தித்தனர். நான் சாரத்துடன் ஆனால் மேற்சட்டை அணியாதிருந்தேன். 'என்ன அவசரம்' என்று கேட்டேன். இயல்பில் திலீபன் பொறுமையற்றவன். ஆனால் நான் கேட்டபின்புதான் அவன் வாய்திறக்க தொடங்கினான்.

'நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன், என்ன நடக்கும்?' என்று கேட்டான்.

எனக்கு வார்த்தைகள் வர நேரம் எடுத்தன. எப்படியோ உரையாடல் தொடர்ந்தது. அவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதை ஏற்க மறுத்தேன். இந்த உரையாடலின் உணர்வுகளை உயிர்த்துடிப்புடன் பகிர்ந்து கொள்ளக்கூடியவராய் தற்போது மேற்குநாடு ஒன்றில் வாழும் அவரது சகாவான ராஜன் உள்ளான். இதனை எழுதுவதற்கு சில தினங்களுக்கு முன் ராஜனுடன் தொலைபேசி வாயிலாக நான் உரையாடினேன். அவன் அந்த உரையாடல்களையும், உணர்வுகளையும் அப்படியே பசுமையாக சுமந்து வைத்திருப்பது தெரிந்தது.

**(தொடரும்)**

# முள்ளிவாய்க்காலை தடுத்திருந்தால் ஈஸ்டர்படுகொலை நடந்திருக்காது



வரலாறு பல புதிர்களுக்கு காலம் தாழ்த்தியேனும் பதிலை வழங்கி விடுகிறது. அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்கிற சிலப்பதிகார அரசியல் தத்துவம் ஒருபோதும் பொய்த்தது கிடையாது. ஸ்ரீலங்காவின் இன்றைய நிலை பல்வேறு கேள்விகளுக்கு வெளிச்சத்தை வழங்கியிருக்கிறது. வரலாற்றின் விடுவிப்புக்களும் நீதியின் இருப்பிடங்களின் ஒலிகளும் நாம் பயணிக்க வேண்டிய பாதைகளையும் அணுக வேண்டிய வழிமுறைகளையும் நினைவுபடுத்துகின்றன. ஈஸ்டர் படுகொலை இலங்கை வரலாற்றில் திறந்திருக்கும் அரசியல் பக்கங்கள், இலங்கை இனப்பிரச்சினையை அணுக வேண்டிய வழிமுறைகளை காட்டுவதைதான் சிங்கள தேசம் முதலில் காற்றுணர வேண்டும்.

இலங்கையை உலுக்கிய ஈஸ்டர்படுகொலை

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பு, உள்ளிட்ட பகுதிகளில் நடந்த ஈஸ்டர் படுகொலை ஸ்ரீலங்கா அரசியலில் பெரும் அதிர்வை உண்டு பண்ணியது. குறித்த தாக்குதலுக்கு பன்னாட்டு பயங்கரவாத அமைப்பான ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு உரிமை கோரியிருந்தது. இந்த தாக்குதல்களினால் 279 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். குறித்த தாக்குதல் இலங்கை முஸ்லீம் மக்கள் சமூகத்தின் மீது பெரும் அச்சுறுத்தலாக இன வெறுப்பாக அமைந்தது. அவர்கள்மீது பெரும் சந்தேக அலையை ஏற்படுத்துவதாகவும் அமைந்தது. அத்துடன் முஸ்லீம் தலைவர்களையும் சிங்களப் பேரினவாத தலைவர்கள் இலக்கு வைத்து தமது இனவெறுப்பு அரசியலை முன்னெடுத்தார்கள்.

அத்துடன் 2019ஆம் ஆண்டில் இலங்கையில் அதிபர் தேர்தல் இடம்பெற்றிருந்தது. இந்த தாக்குதலினால் அப்போது தேர்தலில் போட்டியிட்ட ராஜபக்சக்களின் பிரதிநிதியான கோத்தபாய ராஜபக்சவின் பக்கமாக ஆதரவு அலை கூடியது. இலங்கையில் பாதுகாப்பு சிக்கல் எழுந்து விட்டது என்றும் விடுதலைப் புலிகளை அழித்து ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டத்தை சிதைத்த கோத்தபாய ராஜபக்சே ஆள வேண்டும் என்கிற தோற்றப்பாடு ஏற்பட்டது. இதனால் குறித்த தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச அதிகாரத்தை கைப்பற்றி இருந்தார்.

**உண்மையை அம்பலப்படுத்திய சனல் 4**

ஈஸ்டர் படுகொலை 2019இல் நடந்த பிறகு, நான்கு ஆண்டுகளின் பின்னர் இப்போது குறித்த படுகொலை தொடர்பில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரித்தானியாவின் முன்னணி ஊடகமும் உலக அளவில் கவனத்திற்குரிய ஊடகமுமமான சனல் 4 ஊடகம் ஈஸ்டர் படுகொலை குறித்து சுமார் நாற்பது நிமிடத்திற்கும் அதிகமான நேரத்தை கொண்ட ஆவணப் படம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் ஈஸ்டர் படுகொலையை யார்? எப்படி செய்தார்கள்? எதற்காக செய்யப்பட்டுள்ளது? என்ற குற்றச்சாட்டுக்கள் அதிர்ச்சியூட்டும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ளன. இதுவே ஸ்ரீலங்காவின் இன்றைய அரசிலையும் உலுப்புகின்றது.

ராஜபக்ச தரப்பினரே இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ளார்கள் என்று சனல் 4 ஆவணப்படம் முக்கிய குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. அதிலும் கோத்தபாய ராஜபக்ச தான் அதிகாரத்திற்கு வரவேணுடுமாக இருந்தார் இத்தகைய தாக்குதல் ஒன்றை நடாத்த வேண்டும் என திட்டமிட்ட விடயமும் இங்கு அம்பலமாகியுள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணா அம்மான் பிரிந்த போது, அவருடன் இணைந்து பிரிந்து பின்னர் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த பிள்ளையானே இந்த தாக்குதலை சில இஸ்லாமிய இளைஞர்களை கொண்டு முன்னெடுத்துள்ளதாகவும் பிள்ளையானுடன் இணைந்து செயற்பட்ட அசாத் மௌலானா என்பவர் குறித்த ஆவணப்படத்தில் கூறியுள்ளார்.



தீபச்செல்வன்

**தவிர்க்க முடியாத சாட்சியங்கள்**

அசாத் அமௌலானாவின் செவ்வியே குறித்த ஆவணப்படத்தில் பிரதான இடத்தை பெற்றுள்ளது. குறிப்பாக ஈஸ்டர்படுகொலை குறித்த சாட்சியமாக இதில் அவர் பயன்படுத்தப்பட்டுள்ளார். இலங்கையில் இருந்து வெளியேறிய அசாத் மௌலான சுவிஸ் நாட்டில் குடியேறிய வேளை அவர் நாட்டில் இருந்து வெளியேறியமைக்காக கூறிய காரணமே இதுவாகும். இதனை மையப்படுத்தியதாக இலங்கையின் கத்தோலிக்க மதகுருமார், மனித உரிமை செயற்பட்டாரளர்கள் போன்றவர்களின் பார்வைகள் மற்றும் கருத்துக்களுடன் குறித்த ஆவணப்படத்தை சனல் 4 தயாரித்துள்ளது. அத்துடன் சொத் மௌலானாவின் சாட்சியத்தோடு இலங்கையின் கிறீஸ்தவ மதகுருவான மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களும் இந்த ஆவணப் படத்தில் ஈஸ்டர் படுகொலை குறித்த நீதியை அவாவி பேசியுள்ளார்.

ஈஸ்டர் படுகொலை நடைபெற்ற காலத்தில் இருந்தே அதற்கான நீதியை முன்வைக்க வேண்டும் என்று மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் வலியுறுத்த வந்தார். அத்துடன் இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்களை கடவுள் காட்டித் தருவார் என்றும் அவர் நம்பிக்கையுடன் கடந்த ஆண்டும் பேசியிருந்தார். அத்துடன் கடந்த காலத்தில் மக்களுக்கு எதிராக வன்முறை செய்த தலைவர்கள், அதே வன்முறையால் இறந்தது போன்றே ஈஸ்டர் படுகொலைக்கு காரணமான தலைவர்களும் வன்முறையால் இறுதிக்கதி அடைவார்கள் என்றும் இறைவணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிக்காக நிந்தித்திருந்தார்.

ரஞ்சித் ஆண்டகை நீதியானவரா?

இதேவேளை தமிழர் தாயகத்தில் கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா அரசு பல குண்டுத் தாக்குதல்களை முன்னெடுத்திருந்தது. ஈஸ்டரை படுகொலையின் போது வானம் தெரியுமாறு இருந்த கொச்சிக்கடை அந்தோனியார் ஆலய கூரையை பார்த்த



வேளையில், எமக்கு நவாலி தேவாலயமும் நந்தாவில் அம்மன் கோயிலும் நினைவுக்கு வந்தது. மனித சதைகள் உருக்குலைந்தபடி அள்ளப்பட்ட காட்சியை ஈஸ்டர் படுகொலையின் போது காணுகையில் எமக்கு நந்தாவில் அம்மன் கோயிலிலும் மடு தேவாலயத்திலும் சிதிறிக் கிடந்த ஈழத் தமிழ் மக்களின் சடலங்கள்தான் நினைவுக்கு வந்தன. சிங்கள அரசு பள்ளிக்கூடம், மருத்துவமனை, ஆலயங்கள் என்று எதனை விட்டு வைத்தது? அன்று தமிழர்களின் ஆலயங்கள் மீது இப்படி குண்டுத் தாக்குதல்களை நடாத்திய போது சிங்கள கிறீஸ்தவ மதகுருக்கள் மௌனமாக சிங்கள அரசின் இன வழிப்புக்கு துணைபோனார்கள்.

அத்துடன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள், முள்ளிவாய்க்காலில் நடந்த இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை முன்னெடுக்ககூடாது என்றும் இலங்கைமீது சர்வதேச தலையீடு வேண்டாம் என்றும் பேசி வந்தவர். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் காரண கர்த்தாக்களில் ஒருவரான கோத்தபாய ராஜபக்சவை ஆதரித்தவர். இன்றைக்கு ஈஸ்டர் படுகொலையின் காரண கர்த்தாவான கோத்தபாய ராஜபக்சவை ஆதரித்தவர் என்ற வகையில் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களும் ஈஸ்டர் படுகொலையின் குற்றவாளியாக, அல்லது துணைபோனவராகவே கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் இன்றைக்கு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவும் சர்வதேச விசாரணை கோருகிறார்கள். இவர்கள் எல்லோரும் பல இலட்சம் ஈழத் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமைக்காக ஈழத் தமிழர் தரப்பு சர்வதேச விசாரணையை கோரிய போது அதற்கு எதிராகப் பேசியவர்கள். நிலைப்பாடு கொண்டவர்கள். உண்மையில் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையாக இருக்கலாம், அல்லது ஒட்டுமொத்த சிங்கள தேசமாக இருக்கலாம், பத்தாண்டுகளுக்கு முன்னர் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதியை முன்வைத்திருந்தால் பத்தாண்டுகளுக்குப் பின்னர் 2019 இல் ஈஸ்டர் படுகொலை நடந்தே இராது. இன்னமும் இதனை உணராமல் சிங்கள சிங்கள தேசம் தம்மை தாமே அழிக்கும் பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறது.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 04 மலர் 39 செப்டெம்பர் 2023 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# நினைவேந்தும் உரிமைக்காக தேசமாக திரள வேண்டும்

காந்திய தேசத்திற்கு அஹிம்சையைக் கற்றுக்கொடுத்த தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தலை தமிழர் தாயகத்தில் பலதரப்பினராலும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனொரு அங்கமாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி புறப்பட்ட 'தியாக தீபம் திலீபன் அண்ணாவின்' ஊர்த்திப் பவனி மீது திருகோணமலையில் வைத்து சிங்கள, பௌத்த தேசிய வாதத்தில் ஊறிப்போன தரப்பின் ஏவலுக்கு இரையான அடிப்படைவாதக் குழுவொன்று மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியிருக்கின்றது.

அத்துடன், இந்த ஊர்திப் பவனியை உடன் இருந்து முன்னகர்த்திக் கொண்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீதும் அக்கட்சியின் மற்றொரு உறுப்பினரும், சட்டத்தரணியுமான நடராஜா காண்டீபன் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவமான, வெறுமனே கட்சியொன்று முன்னெடுத்த விடயத்துகானது என்ற போர்வையில் பார்க்க கூடாது. தமிழினத்தின் அடிப்படை உரிமைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகவும், அடக்குமுறையின் அதியுச்சமான வெளிப்பாடாகவும் பார்க்க வேண்டியதாகும்.

எதிரியாக இருந்தாலும், இறந்த பின்னர் அவனது உடலுக்கு மரியாதை செய்ய வேண்டும், உடலத்தை மரியாதையாக கையாள வேண்டும், அதனை அடக்கம் செய்ய வேண்டும் என்கின்றன சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும், போர்ச் சட்டங்களும், காணப்படுகின்ற.

அவ்வாறான நிலையில் தமிழின விடுதலைக்காக அஹிம்சை வழியில் உண்ணா நோன்பிருந்து உயிரைத் தியாகம் செய்தவரை நினைவில் கொள்ளுதல், அவருக்கு அஞ்சலி செலுத்துதல் என்பன சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

சிறிலங்காவில் வரலாற்றுக்கு முன்னரே, விடுதலைக்காக உயிர் துறந்தவர்களை நினைவில் கொள்ளும் மரபு ஒன்று இருந்தது. அதுவும் ஆதிக்குடிகளான தமிழினத்திடம் அது தொடர்தேச்சியாகவே உள்ளது.

அவ்வாறான நிலையில் அந்த உரிமையை பறித்தெடுப்பதற்கு சிங்கள, தேசிய கடும்போக்குவாதிகள் அதியுச்சமாக முனைந்திருக்கின்றார்கள் என்பதற்க மேற்படி சம்பவம் சாட்சியமாக நிற்கின்றது.

அதுமட்டுமன்றி, நினைவேந்தும் உரிமையை பறித்து அடிப்படை உரிமைகளை மறுதலித்து தமிழினத்தை அடக்குமுறைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற பேரினவாதத்தின் பெரும் நோக்கமும் மீண்டும் வெளிப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்த் தேசிய இனத்தின் மக்கள் பிரதிநிதியொருவர் பகிரங்க வெளியில் தாக்கப்படுவதன் ஊடாக, ஒட்டுமொத்த தமிழினத்தையும் தமது உரிமைகளை கைவிட்டு அடங்கியொடுங்கி அடிமைகளாக இருங்கள் என்ற எச்சரிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலை ஒரு சிறு குழு மேற்கொண்டிருந்தாலும், நிச்சயமாக அரச உயர் மட்டத்தின் அனுசரணை முதல், முப்படைகளினதும், புலனாய்வாளர்களினதும் பாதுகாப்பு என்று அனைத்தும் ஒரேங்கே வழங்கப்பட்டுள்ளது என்பது தான் யதார்த்தமாகும்.

இதனைவிடவும், குறித்த சம்பவத்தைக் காரணம் காண்பித்து இனங்களுக்கள் பதற்றம் ஏற்படுவதாக கூறி நினைவேந்தல்களை தடுப்பதற்காக இலட்ச ரூபாக்களை செலவழித்து நீதிமன்றத் தடை உத்தரவுகளும் பெறுவதற்கும் ஒன்றுக்கு பலமுறை முயற்சிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, வெறுமனே தியாக தீபத்தின் ஊர்தி மீது தாக்குதல், என்பதற்கு அப்பால் தேசத்துக்காக, தேசியத்துக்காக குரல் எழுப்பியவர்களை கூட நினைவுகூருவதற்க தகுதி அற்றவர்கள் தமிழர்கள் என்ற தோற்றப்பாடே கட்யெழுப்ப படுகின்றது.

எனவே, இந்த விடயத்தினை வெறுமனே ஒரு அரசியல் கட்சி சார்ந்தோ, ஒரு விடுதலை இயக்கம் சார்ந்தோ சிந்திக்காது தேசமாக ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு இல்லாது விட்டால் எதிர்வரும் காலத்தில் எந்தவொரு நினைவேந்தலுக்கும் சிங்கள,பௌத்த தேசிய வாதம் முழுமையான தடைகளையே ஏற்படுத்தவே முயலும். அது தமிழன அடக்குமுறையின் அதியுச்சமாக இருக்கும்.

# திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க முடியாது!

## – நீதிமன்றம் உத்தரவு



"தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க முடியாது" என இரண்டாவது தடவையாகவும் யாழ் நீதவான் நீதிமன்றம் இன்று (22) உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் "தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்குத் தடைவிதிக்கக் கோரி, யாழ் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று முன்தினம் நீதிமன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்றைய தினம் கொழும்பில் இருந்து ஹெலிகெப்டர் மூலம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சட்டமா அதிபர், திணைக்களத்தின் பிரதானிகளினால் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க கோரி மீண்டுமொரு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் இம்மனு மீதான விசாரணைகள் 22.09.2023 md;W எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க முடியாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## மறைந்த காட்டுனிஸ்ட் அஸ்வினின்

## தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து



# ஐ.நா.மனித உரிமை பேரவையில்...

# பாதிக்கப்பட்ட தரப்பின் எதிர்காலம்?

தந்திரீகன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுனுடைய 54ஆவது கூட்டத்தொடர் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இந்தக் கூட்டத்தொடர் இம்முறை தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முக்கியமற்ற தொன்றாகவே பார்க்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தொடரில் சிறிலங்கா பற்றி எவ்விதமான தீர்மானங்களும் நிறைவேற்றப்படப்போவதில்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த 51ஃ1தீர்மானத்துக்கு அமைவாக 'சிறிலங்காவின் மனித உரிமைகள், நல்லிணக்கத்தை மேம்படுத்தல் மற்றும் பொறுப்புக்கூறல்' விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றகரமான விடயங்கள் பற்றிய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் ட்ரக், 51ஃ1 தீர்மானம் தொடர்பிலான முன்னேற்றங்கள் தொடர்பில் தன்னுடைய எழுத்து மூலமாக அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்றார்.

குறித்த அறிக்கையில்,

- நாடு முகங்கொடுத்திருக்கும் தீவிர பொருளாதார நெருக்கடியின் விளைவாகத் தோற்றம்பெற்றுள்ள உணவுப்பாதுகாப்பின்மை நிலை வாழ்வதற்கான உரிமை மற்றும் ஆரோக்கியமாக வாழ்வதற்கான உரிமை உள்ளிட்ட மனித உரிமைகளில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- இது சிறுவர்கள் மத்தியிலான மந்தபோசணை குறைபாடு அதிகரிப்பதற்கும், பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைவதற்கும் வழிகோலியுள்ளது.
- கடந்த 2020 ஒக்டோபர் மாதம் அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தின் மூலம் மிகவும் வலுவான நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை மீள அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திருத்தமானது முக்கிய கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மை மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.
- கடந்த மே மாதம் 26 ஆம் திகதி அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலத்தின் உள்ளடக்கங்கள் அந்த ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை குறித்த கேள்வியைத் தோற்றுவித்தது. அதன் உள்ளடக்கத்தை ஒத்த சரத்துக்களே சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டம் மற்றும் பயங்கரவாதத்தடைச் சட்டம் போன்றவற்றிலும் உள்ளடங்கியிருப்பதுடன், அச்சட்டங்கள் அவ்வப்போது ஏதேச்சதிகாரமான முறையில் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கமுடிகின்றது.
- பயங்கரவாதத்தடைச்சட்டத்துக்குப் பதிலாக கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், அச்சட்டமூலம் வாபஸ் பெறப்பட்டு, அதுபற்றிய மேலதிக கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
- பயங்கரவாதத்தடைச்சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுவருவதுடன், கடந்த ஒகஸ்ட் மாதம் அரசாங்கத்தின் தரவுகளின்படி பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் 21பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
- ஆர்ப்பாட்டங்களின்போது கூட்டத்தைக் கட்டுப்படுத்தல், சட்ட அமுலாக்கம், போதைப்பொருள் தடுப்பு மற்றும் புனர்வாழ்வளித்தல், சோதனைச் சாவடிகளில் சோதனையிடல் உள்ளிட்ட பொதுமக்களுடன் தொடர்புடைய பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவது கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளது.
- மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், வடகிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளிட்ட தரப்பினர் மீதான கண்காணிப்புக்களும், ஒடுக்குமுறைகளும், மீறல்களும் தொடர்கின்றன. பொலிஸ்காவலின்கீழ் இடம்பெற்ற சித்திரவதைகள் மற்றும் மரணங்களும் புதிதாகப் பதிவாகியுள்ளன.




- பொருளாதார நெருக்கடியை சீரமைப்பதற்கு அவசியமான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்படவேண்டும். அதேவேளை அவ்வாறு மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்கள் சமூகத்தின் குறித்தவொரு பிரிவினரை மாத்திரம் சமத்துவமற்ற முறையில் இலக்குவைப்பதாக அமையக்கூடாது.
- அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வின் மூலம் அரசியல்தீர்வை வழங்குவது குறித்து சகல தரப்பினருடனும் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் வரவேற்கத்தக்கவை என்றபோதிலும், நல்லிணக்கத்தை நோக்கிய எந்தவொரு நியாயமான செயன்முறையினதும் முக்கிய கூறாக பொறுப்புக்கூறலே காணப்படுகின்றது
- பாதிக்கப்பட்ட மக்கள் 14ஆண்டுகளாக நீதிக்காக காத்திருந்து வீதிகளில் போராடுகின்ற அவலங்கள்ந நீடிப்பதும், ஆக்கிரமிப்புக்கள், இன, மத முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுதல் தொடருக்கின்றது.
- இவற்றுக்கு மேலாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பவம் தொடர்பாக சர்வதேச நிபுணர்களின் பங்கேற்புடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.
- ஐ.நா.மனித உரிமைகள் பேரவையினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சிறிலங்காவில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் பற்றி சாட்சியங்களை திரட்டும் பொறிமுறைக் கட்டமைப்பிடம் வெவ்வேறு நாடுகளில் முன்னெடுக்கப்படுகின்ற தனிநபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளில் பங்களிப்பை செய்வது கரிசனைகள் உள்ளன.
- மனித உரிமை மீறல்கள், பொருளாதாரக் குற்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள் மீது இலக்கு வைக்கப்பட்ட தடைகள், சொத்துக்கள் முடக்கல் ஆகிய விடயங்களை தொடர்ந்து சர்வதேச நாடுகள் முன்னெடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- சூழல் விவகாரங்களைக் கவனத்தில் கொண்டுள்ளதோடு ஐ.நா முகவர் நிறுவனங்களுக்கும் சர்வதேச நிதி கொடையாளிகளும், தமது நிதியளிப்புக்கள் மற்றும் திட்டங்களை முன்னெடுக்கும்போது, மனித உரிமைகள் உள்ளிட்ட ஜனநாயக பண்புகள் தொடர்பான அடைவ மட்டத்தினைக் கருத்தில் கொண்டு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் சிறிலங்கா நாட்டின் ஒட்டுமொத்த நிலைமைகளை மையப்படுத்தியதாக கவனத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயங்களாகவும், சுட்டிக்காட்டல்களாகவும் உள்ளன என்பது யதார்த்தமானது.

ஆனால், இந்த அறிக்கையானது அடிப்படைகளற்ற குற்றச்சாட்டுக்களை கொண்டுள்ளதாகவும் அதனால் அவ்வறிக்கையை சிறிலாங்கா அரசாங்கம் முழுமையாக நிராகரிப்பதாகவும், இருப்பினும், ஐ.நா.வுடன் தொடாந்தும் இணைந்து செயற்பட தயார் என்றும் சிறிலங்காவின் ஜெனிவாவுக்கான வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்க உடனடியாகவே பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையானது, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையானது வெறுமனே சுட்டிக்காட்டல்களுடனும், பதிவு செய்தல்களுடனும் தன்னுடைய பணியை நிறுத்திக்கொள்கின்றது. அதற்கு அப்பால் முன்னகர்ந்து செயற்படுவதற்கான ஆணையை அது கொண்டிருக்கவில்லை. ஆகவே அதன் அறிக்கை உள்ளிட்ட தீர்மானங்களுக்கு அடிபணிய வேண்டியதில்லை என்ற நிலைப்பாட்டுக்கு சிறிலங்கா வந்துவிட்டது என்பது வெளிப்படையாகின்றது.

ஆகவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாக இருந்தால், சிறிலங்கா மனித உரிமைகளையும், மனிதாபிமானச் சட்டங்களையும் மீறியுள்ளமையை உரிய சான்றுகளுடன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் அல்லது விசேட தீர்ப்பாயம் ஸ்தாபிக்கப்பட்டு அதன் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்பது மீண்டும் வலிதாகின்றது.

போர் நிறைவுக்கு வந்து தமிழ் இனம் அழிக்கப்பட்டு 14 ஆண்டுகளாகின்ற போதும், ஐ.நா.வின் அறிக்கைகளிலும், தீர்மானங்களிலும் பாதிக்கப்பட்ட தரப்பு என்பதற்கு பதிலாக 'தமிழ் மக்கள்' என்ற வார்த்தைப் பிரயோகத்தினை பயன்படுத்தாத பிற்போக்கு நிலைமை ஐ.நா அறிக்கையில் நீடிக்கின்றது.

அதேநேரம், தமிழினம், தொடர்ச்சியாக இணைந்த வடக்கு,கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வுடன் சுயநிர்ணயத்தினை உறுதிப்படுத்தும் வகையிலான தீர்வினையே கோரி ஆணை வழங்கி வருகின்ற நிலையில், அதற்கு முற்றிலும் எதிரான வகையில் 13ஐ ஐ.நா.வும் திணிக்கும் நோக்கில் இருப்பதும் வெளிப்பட்டுள்ளது.

மேற்படியான நிலைமைகளால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான வழியொன்று ஏற்படும், நீதி நிலைநாட்டப்பட்டு பொறுப்புக்கூறல் செய்யப்படும் என்ற எதிர்பார்ப்பு தற்போது சுருக்க ஆரம்பித்திருக்கின்றது.

ஆனால், இவ்விதமான காத்திரமான பணிகளை ஆற்றுவதற்கு, நல்லூரானின் வருடாந்த திருவிழாவிற்குச் சென்றுவருவது போன்று தொடர்ந்தும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமுகத்தரப்பினர் செயற்பட்டுக்கொண்டிருக்க முடியாது.

ஜெனிவாவுக்கு செல்வதும், உரையாற்றுவதும், பக்க நிகழ்வுகளில் கலந்துரையாடுவதாகவும் அவற்றை ஊடகங்கள் ஊடாக பிரசாரப்படுத்தி தன்னிறைவு கண்டவர்களாக இருந்துவிட முடியாது. அதனால் இனம் விடுதலையை அடைந்துவிடப்போவதில்லை.

இந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்களும், அவர்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற அரசியல் மற்றும் சிவில் தரப்பினர் மிகவும் அவதானம் செலுத்த வேண்டியதொரு தருணம் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

அதனையுணர்ந்து, தாயகத்தில் உள்ள தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளும், சிவில் அமைப்பினரும், தமிழகத்தில் உள்ள ஈழப்பற்றாளர்களும், புலம்பெயர் தேசங்களில் உள்ள ஜெனிவா சார்ந்த செயற்பாட்டாளர்களும் ஒரே நேர்கோட்டிற்கு வருகை தர வேண்டும்.

அவ்வாறான நிலைமையை ஏற்படுத்தாது, ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக எவ்விதமான சாதகமான நிலைமைகளையும் முன்னகர்த்த முடியாது.

அதேநேரம், பாதிக்கப்பட்ட மக்களின் விவகாரம், காலம்தாழ்த்தப்படும் போது வலுக்குறைந்து செல்லும் விடயமாகவே உருமாறி வருவதால், இந்த வியடத்தில் தாயக, தமிழக, புலம்பெயர் தரப்புக்கள் இணைந்த 'கூட்டுப்பொறிமுறை' ஒன்றை உடன் ஸ்தாபிக்க வேண்டியது அவசியமாகின்றது.

அப்பொறிமுறை நிச்சயமாக, தேர்தல் அரசியலுக்குள் செல்லாத பிரதிநிதித்துவங்களை கொண்டிருப்பது மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். இந்நிலைமையால் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக் கோரிக்கையை நிறைவேற்றுவதோடு, சிறிலங்கா அரசாங்கத்தினைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கான உந்துதல்களை மேற்கொள்ள முடியும்.

அவ்வாறு இல்லாது விட்டால், வெறுமனே ஒவ்வொரு மனித உரிமைகள் அமர்விலும் சம்பிரதாயத்துக்காக தொட்டுச் செல்லவேண்டிய விடயங்களாகவே சிறிலங்காவின் மனித உரிமைகள் மீறல்களும், பாதிக்கப்பட்டவர்கள் மீதான பார்வையும் நீடித்திருக்கும்.

# சனல்-4 காணொளி இலாப, நட்டக்கணக்கு




**தேசிகன்**

2011இல் 'சிறிலங்காவின்; கொலைக்களம்' என்ற தலைப்பிலான காணொளியை பிரித்தானியாவின் 'சனல்4' ஒளிபரப்பியிருந்தது. இது போர்க் குற்றங்கள் பற்றிய பெரும் சர்ச்சைகளையும் வாதப்பிரதிவாதங்களையும் தோற்றுவித்தது.

சிறிலங்கா அரசாங்கம், அக்காணொளியையும், உள்ளடக்கத்தையும் முழுமையாக நிராகரித்திருந்தாலும், உலகளாவிய ரீதியில் போர்க்குற்றங்கள், இன அழிப்பு, மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான சிக்கலில் இருந்து தற்போது வரை விடுபடாமைக்கு அக்காணொளியும் ஒருகாரணமாகின்றது.

இவ்வாறான நிலையில், சனல் 4 ஊடகம் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் 49வெளிநாட்டவர்கள் உட்பட 273உயிர்களைக் காவுகொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தொடர்பிலான கணொளியை அண்மையில் வெளியிட்டுள்ளது.

குறித்த தாக்குதலானது, 3 தேவாலயங்கள், கொழும்பின் 3 ஐந்துநட்சத்திர விடுதிகளென 8 இடங்களை இலக்கு வைத்து 7 இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பங்கேற்புடன் சஹ்ரான் தலைமையிலான குழுவினால் நடத்தப்பட்டதோடு, அதற்கு ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியிருந்தது.

**காணொளியின் உள்ளடக்கம்**

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை, அதன் பின்னர் ஒருதாசப்தத்துக்குப் பின்னர் 209இல் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல்கள் ஆகிய இருவிடயங்களையும் மையப்படுத்தி 54நிமிட காணொளியை சனல்4 வெளியிட்டுள்ளது.

இக்காணொளியின் பிரதான மூலங்களாக இருப்பது, பிள்ளையான் என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துறை சந்திரகாந்தனின் ஊடகப் பேச்சாளர் மற்றும் நிதிச் செயலாளராக செயற்பட்ட ஹன்சீர் அசாத் மௌலானா மற்றும் தற்போது நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் திட்டமிட்ட குற்றச்செயல்களை தடுக்கும் விசாரணைப் பிரிவின் முன்னாள் தலைமை அதிகாரியான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த டி சில்வா ஆகியோரும் பெயர் குறிப்பிடாத அரச அதிகாரி ஒருவருமாக உள்ளனர்.

திரபோலி எனும் பெயரில் குழுவொன்றை உருவாக்குவதற்காகவே தாமும் பிள்ளையானும் அவ்வேளையில் பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்ததாக ஹன்சீர் அசாத் மௌலானா அக்காணொளியில் குறிப்பிடுகின்றார்.

திரிபோலி குழுவானது கோட்டாபயவின் நேரடி கட்டளையின் கீழ் செயற்பட்டதாகவும் அரசாங்கத்திற்கு எதிரானவர்களைத் தெரிவு செய்து அவர்களை அக்குழுவினர் கொலை செய்ததாகவும் ஹன்சீர் அசாத் மௌலானா குறிப்பிட்டுள்ளார்.

லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்யுமாறு கோட்டாபய ராஜபக்ஷவே பணித்ததாகவும் ஹன்சீர் அசாத் மௌலானா குறித்த நிகழ்ச்சியில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சந்தேகநபர்களை சந்தித்த விதம் தொடர்பிலும் ஹன்சீர் அசாத் மௌலானா தெளிவுபடுத்துகையில்,

'சந்திப்பொன்றை ஏற்பாடு செய்யுமாறு பிள்ளையான் என்னிடம் கூறினார். சுரேஷ் சலே மற்றும் அந்த நபர்களுடன் அந்த சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு கூறினார். பின்னர் வரவேண்டிய இடம் தொடர்பில் நான் அந்த குழுவுக்கு தகவல் வழங்கினேன். எனக்கு அனைத்து விடயங்களும் தெரியாது. நான் அந்த இடத்திற்கு சென்ற போது அது மிகப்பெரிய தென்னந்தோப்பாக இருந்தது. அங்கு ஒரு வீடு இருந்தது. அவர்கள் வெள்ளை நிற வேனொன்றில் வந்தனர். 6 பேர் வந்தனர். சைனி மௌலவி அங்கு வந்து எனக்கு கைலாகு கொடுத்து என்னை அரவணைத்து சலாம் செய்தார். அதற்கு பின்னர் அவரது சகோதரரான சஹ்ரானை அடையாளப்படுத்தி விட்டு இவரே எமது அமீர் என்று கூறினார். அமீர் என்றால் தலைவர் என்று பொருள்படும். நான் அவர்களுக்கு சுரேஷ் சலேவை அறிமுகப்படுத்தினேன். அந்த சந்திப்பு நீண்ட நேரம் இடம்பெற்றது. ராஜபக்ஷவினருக்கு சிறிலங்காவில் பாதுகாப்பற்ற நிலைமையொன்றை உருவாக்க வேண்டிய தேவையிருப்பதாக அதன் பின்னர் சுரேஷ் சலே என்னிடம் கூறினார். அதுவே கோட்டாபய ஜனாதிபதியாகவிருக்கும் ஒரேயொரு மார்க்கம் எனவும் அவர் கூறினார்" என்று குறிப்பிட்டுள்ளார்.



தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட தினத்தில் இடம்பெற்ற சம்பவமொன்றைக் குறிப்பிட்டு, அவர் சுட்டிநிற்கும் தரப்புக்களுக்கு உள்ள தொடர்புகளை மீண்டும் வலுவாக வெளிப்படுத்துகின்றார் அசாத் மௌலானா.

அவர், "சுரேஷ் சலே என்னை தொடர்புகொண்டார். விரைவாக தாஜ்சமுத்ராவுக்கு செல்லுமாறும் நாங்கள் வரும் வரை ஒருவர் காத்திருப்பதாகவும் அவரை எங்கள் வாகனத்தில் ஏற்றிக்கொள்ளுமாறும் கூறினார். அவரை வாகனத்தில் ஏற்றியவுடன் அவரின் தொலைபேசியை பெற்றுக்கொள்ளுமாறும் கூறினார். உங்களால் எங்கு செல்ல முடியும் என்று அவரிடம் கேட்டு, அவரை அந்த இடத்தில் இறக்கிவிடுமாறும் கூறினார். அதன்போது ளசை, நான் மட்டக்களப்பில் இருப்பதாக கூறினேன். குண்டுத்தாக்குதலின் பின்னர் நான் அவர்களின் முகங்களை அடையாளங்கண்டேன். அந்த கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் முதலாவது நபர் சஹ்ரான்.

நான் அவர்களை அறிந்திருந்தேன். நான் அச்சமடைந்தேன். அவ்வேளையில் நான் பிள்ளையானை தொடர்புகொண்டேன். வாயை மூடிக்கொண்டிருக்குமாறும் உங்களுக்கு எதுவும் தெரியாது அவ்வளவு தான் என்றும் பிள்ளையான் என்னிடம் கூறினார்" என்று கூறியுள்ளார்.

இதேநேரம், லசந்த விக்கிரமதுங்க விடயத்தினை தெளிவுபடுத்தும் அசாத் மௌலானா, "ஒருநாள் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபயவை பிள்ளையானுடன் சந்திப்பதற்காக சென்றபோது, அவருடைய மேசையில் த சண்டே லீடர் பத்திரிகை இருந்தது. அவர் அதனை கையிலெடுத்தார்.

லந்தவின் பெயரைக் கூறவில்லை. ஆனால் இந்த நாய் என்னுடன் தொடர்ச்சியாக விளையாடுகின்றது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். விரைவில் அதனைச் செய்யுங்கள்" என்று குறிப்பிட்டதாக கூறியுள்ளார்.

இந்நிலையில், அக்காணொளியில் தோன்றும் முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த டி சில்வாவு, திரிபோலி கட்டமைப்பு மற்றும் லசந்த விக்மரதுங்கவின் கொலை தொடர்பில் கருத்து வெளியிட்ட சமயத்தில், "ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கு திரிபோலி குழுவின் அங்கத்தவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட 05 தொலைபேசிகள் மற்றும் அவர்கள் அதனை செயற்படுத்திய விதம் தொடர்பிலான தகவல்கள் தொடர்பில் தன்னால் வெளிப்படுத்த முடியும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் 2019ஆம் ஆண்டு, பயங்கரவாத தாக்குதல்களை மேற்கொண்ட இஸ்லாமிய அடிப்படைவாத தீவிரவாதத்தினை ஒழிப்பேன் என்ற கோசத்துடன் குண்டுத்தாக்குதல்கள் நடைபெறுவதற்கு ஐந்து நாட்கள் முன்னதாக அதாவது ஏப்ரல் 16ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்த கோட்டாபய ராஜபக்ஷ 69இலட்சம் வாக்குகளை பெற்று ஜனாதிபதி பதவியில் அமர்ந்தார் என்பதும் அக்காணொளியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**சந்தேக தரப்பினரின் மறுதலிப்பு நியாயங்கள்**

இக்காணொளி வெளியாகியதும், மக்கள் புரட்சியால் ஆட்சி அதிகாரத்தினை விட்டு ஓழித்தோடிய கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் மௌனம் கலைத்தார். அவர், சனல்4 காணொளியை அடியோடு நிராகரிப்பதாக அறிவித்ததோடு, ராஜபக்ஷக்கள் மீது கரும்புள்ளியை ஏற்படுத்துவதையே சனல்4 ஊடகம் நெடுங்காலமாக கொண்டுள்ளதோடு, படைகளையும் இலக்கு வைத்துச் செயற்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

7ஆம் பக்கம் பார்க்க...

6ஆம் பக்க தொடர்ச்சி...

சனல்4 தொலைக்காட்சி, ராஜபக்ஷ குடும்பத்துடன் தொடர்ந்தும் குரோதத்துடனேயே செயற்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நல்லாட்சிக் காலத்தில் பாரிய மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, அரச குற்றப்புலனாய்வு திணைக்களம் பல்வேறு விசாரணை நிறுவனங்களுக்கு சென்று, வழக்கு விசாரணைகளில் கலந்து கொண்ட தாம் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு இவ்வாறான செயற்பாட்டை எவ்வாறு திட்டமிட்டிருக்கு முடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ராஜபக்ஷக்களின் விசுவாசிகளும், ஆதரவ தேசிய வாதிகளும், 2018ஆம் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்றபோதே ராஜபக்ஷக்களின் பெரும்பான்மையுடன் ஆட்சிக் கட்டிலில் அமரப்போவது உறுதியாகிவிட்டதோடு எதற்காக வெறுமனே 9இலட்சம் கிறிஸ்தவ வாக்குகளுக்காக தாக்குதல்களை நடத்த வேண்டும் என்றும் கேள்வி எழுப்ப ஆரம்பித்துள்ளனர்.




சனல்4இல் சாட்சியமளித்த அசாத் மௌலானாவின் குற்றச்சாட்டுக்களை பிள்ளையான் மறுத்திருக்கிறார். அசாத் மௌலானா பொய் கூறுவதாகவும், ஐரோப்பாவில் புகலிடக்கோரிக்கையை விடுத்துள்ள அவர் தஞ்சம் மற்றும் நிதி உதவிகளைப் பெறுவதற்காகவும் அவர் இதனைக் கூறியிருப்பதாகவும், குறிப்பிட்டிருக்கிறார்.

அத்தோடு, அவர், அசாத் மௌலானாவின் தனிப்பட்ட திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடிகளால் தான் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமைகள் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமட்;டுமன்றி, தற்போது ஆட்சியில் உள்ள சிறிலங்கா அரசாங்கமும், பங்காளர்களும், சனல்4 காணொளி வெளிவந்துள்ள தருணம் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமையால் அதுவொரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துருவாகத்தின் அடிப்படையில் பௌத்த தேசியவாத தேரர்களும், சிங்கள சிவில் அமைப்பினரும் சிறிலங்கா உயர்ஸ்தானிகரத்திற்கு முன்னால் போர்க்கொடிகளுடன் போராட்டத்தினை முன்னெடுத்திருந்ததோடு எதிர்காலத்திலும் மேலும் பல போராட்டங்களுக்கும் தயாராகி வருகின்றனர்.

மேலும் புத்தளம் கரடிப்பூவலில் 2018 பெப்ரவரி மாதம், சஹ்ரான் குழுவினருடன் சந்திப்பில் பங்கேற்றதாக அசாத் மௌலானா கூறியிருந்த நிலையில், அந்தக் காலப்பகுதியில் தான் மலேசியாவில் இருந்ததாக குறிப்பிட்டிருக்கிறார் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே.

2016 தொடக்கம் 2018 வரை தான் மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றியிருந்ததோடு, 2019இல் குண்டுவெடிப்பு நிகழ்ந்த போது தான், புதுடில்லியில் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சி நெறியில் ஈடுபட்டிருந்ததாகவும், கூறியுள்ளார்.

மலேசியாவில் இருந்த தாம் சிறிலங்காவில் எவ்வாறு சஹ்ரான் குழுவினரைச் சந்திக்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளதோடு, ஏற்கனவே தன்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்த அருட்தந்தை சிறில் காமினி மீது 50மில்லின் ரூபா கோரி மானநட்ட வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

### சர்வதேச விசாரணை கோரிக்கை முரண்பாடான நிலைமைகளும்

சனல்4 காணொளி வெளியாகியதும், பேராயர் கர்த்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, சர்வதேச விசாரணையைக் கோரியுள்ளார். அவர் உள்ளக ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக் கட்டமைப்புக்கள் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ள போதும், அவை தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், சனல்4 காணொளி தொடர்பில் தன்னுடைய நம்பிக்கையை வெளியிட்டுள்ள அவர், அதில் கூறப்பட்டுள்ள நபர்களை உடனடியாக கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும், அதற்காக சர்வதேச பங்கேற்புடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், அவருடைய அணியினரும் கூட சர்வதேச விசாரணைகளையே வலியுறுத்துவதாக வெளிப்படையாக கூறியுள்ளனர். குறிப்பாக, சஜித் பிரேமதாச, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றினால் மட்டுமே உண்மைகளை கண்டறிய முடியும் என்பதை குறிப்பிட்டுள்ளதோடு உள்நாட்டில் அதற்கான சாதக நிலைமைகள் இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும், தாக்குதல்கள் நடத்தப்பட்ட காலத்தில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவும் தற்போது சர்வதேச விசாரணையை கோரியிருக்கின்றார். அவர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த அமெரிக்க புலனாய்வுப் பிரிவு சாட்சியங்களை எடுத்துச் சென்றதாகவும் அவற்றுக்கு என்ன நடந்தது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆனால் இவர்கள் அனைவரும், இறுதிப்போர் தொடர்பிலான சிறிலங்காவின் கொலைக்களம் காணொளியை சனல்4 வெளியிட்டபோது அதனை முழுமையாக நிராகரித்தனர். அவை புனையப்பட்ட காட்சிகள் என்று கூறினார். இதில் பேராயர் ரஞ்சித் ஆண்டகையும் மாறுபட்டவராக இருக்கவில்லை.

அதுமட்டுமன்றி, போர் நிறைவுக்கு வந்து இற்றைக்கு 14ஆண்டுகளாகின்ற போது பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதி நிலைநாட்டப்படுவதற்காக சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றபோதும், மேற்படி தரப்பினர் இதுவரையில் அதனை ஏற்றுக்கொண்டதாகவே அல்லது, அதற்கு ஆதரவளித்ததாகவே இல்லை.

அதற்கு அவர்கள், தமது படைத்தரப்பினர் பாதிக்கப்படுவார்கள், உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டு வந்த தென்னிலங்கை சிங்களத் தலைவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அடிப்படை நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தே மறுதலித்தார்கள் என்பது இங்கே சுட்டிக்காட்டத் தக்கதாக இருக்கின்றது.

### ரணிலின் நகர்வு

2019இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றபோது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அப்போதே தன்னை அழைக்காதே தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதால் தனக்கு எவ்விதமான தகவல்களும் தெரியாது என்று கைவிரித்திருந்தார்.

அதேபோன்று, அவருடைய மருகனான ருவான் விஜயவர்த்தன பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக அப்போது இருந்தபோதும் அவரும் சம்பவம் தொடர்பில் எதுவும் தெரியாது என்றும் கைகழுவியிருந்தார்.

ஆனால் தற்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் அவர் சனல்4 காணொளி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.எம்.இமாம் தலைமையில் மூவரடங்கிய குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றும் அடுத்து நியமிக்கப்படவுள்ளது.

ஆனால், சனல்4 காணொளியை பாதுகாப்பு அமைச்சர் என்ற பதவிநிலையினைக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க முற்றாக நிராகரித்திருக்கின்றார். பாதுகாப்பு அமைச்சின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அது உறுதியாகின்றது.

ஆகவே இங்கே, பிரதான கேள்வியென்னவென்றால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக சனல்4 காணொளியை அடுத்து விசாரணைகளை மேற்கொள்வதாக காண்பித்தாலும், பாதுகாப்பு அமைச்சராக அதனை நிராகரிக்கின்றார். அவரும் ஊறிப்போன சிங்கள, பௌத்த தேசியவாதத்திற்குள் புதைந்துகொண்டு முப்படைகளையும் பாதுகாக்கவே முயற்சிக்கின்றார் என்பதும் அப்பட்டமாகின்றது.

இதனைவிடவும், அடுத்து தேர்தல் ஆண்டாக உள்ளதால் விசாரணைக்குழுக்களை ஆரம்பித்து அவ்வப்போது அவை கூடி சாட்சியங்களை பெற முனைந்தால் அவை தேர்தல்கால வாக்கு அறுவடைக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரிதளவில் கைகொடுக்கும் என்பதையும் அவர் அறியாதவர் அல்ல.

அதேநேரம், ராஜபக்ஷக்கள், மைத்திரிபால, படை அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரையும் தனது கைக்குள் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்வதற்கும், அவர் சனல்4 காணொளி விவகாரத்தினை தாராளமாகவே பயன்படுத்தப் போகின்றார். கூடவே அவருக்கு சிங்கள, பௌத்த தேசிய வாத ஆதரவு சக்திகளும், தேரர்களும் சர்வதேச விசாரணைக் கோரிக்கையை நிராகரித்த தலைவர் என்ற அடிப்படையில் ஆதரவுக்கரம் நீட்டுவார்கள் என்பதையும் அவர் நன்கு உணர்ந்துள்ளார்.

முடிவாக, சனல்4 வெளிவந்துள்ள இந்த தருணத்தில், தாக்குதல் சம்பவம் நடைபெறப்போகின்றது என்று அறிந்திருந்தும் அதனைத் தடுக்காதவர்களும், பொறுப்புக்கூற வேண்டியவர்களும் அதிகாரத்திலும், அரசாங்கத் தரப்பிலும் உள்ளார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

குறிப்பாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக உள்ளார், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த அவருடைய மருமகன் ருவான் விஜயவர்த்தன, காலநிலை மாற்றத்துக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக உள்ளார்.

தாக்குதல் நடைபெறும் போது ஜனாதிபதி பதவி வகித்த மைத்திரிபால சிறிசேன, தற்போது அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகிய வண்ண உள்ளிட்ட தரப்பினருடன் இணைந்து விட்டதால் அவரும் பதவி இல்லாது விட்டாலும் அரச தரப்பாகிவிட்டார்.

இதனைவிடவும், பொதுஜனபெரமுன விடமே பாராளுமன்ற பெரும்பான்மை உள்ளமையால் ராஜபக்ஷக்களிடத்திலேயே பாராளுமன்ற அதிகாரம் உள்ளது. இதனால் ராஜபக்ஷக்களுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்று எதிர்பார்க்க முடியாது.

அதுமட்டுமன்றி, சம்பவம் நடைபெற்றபோது அரச புலனாய்வு பிரிவின் தலைவராக இருந்த நிலந்த ஜெயவர்த்தன தற்போது, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தரத்திற்கு உயர்த்தப்பட்டு பொலிஸ் பிரிவின் நிருவாகப்பிரிவினை பொறுப்பெடுத்துள்ளார்.

அதேநேரம், குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ள மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே இன்னமும் பதவியில் நீடித்துக் கொண்டுள்ளார். இவர்களை விடவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து அதிகம் கரிசனை செலுத்தி தகவல்களை வெளியிட்ட மனுச நாணயக்கார, ஹரீன் பெர்ணான்டோ ஆகியோர் அரசாங்கத்தில் அமைச்சர்களாக உள்ளார்கள்.

இவற்றைவிடவும், 1994ஆம் ஆண்டிலிருந்து பதவியில் இருந்த அனைத்து ஜனாதிபதிகளும் தற்போது ஒரே அணியாகிவிட்டனர். ஜனாதிபதி ரணிலை சந்திரிகா ஆதரிக்கிறார். முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த, கோட்டபாய, மைத்திரி உள்ளிட்டவர்கள் ஆதரிக்கின்றார்கள். அவ்வாறான நிலையில் யார் மீது யார் விசாரணைகளை முன்னெடுப்பது என்பதும் யார் யாரை குற்றவாளிகளாக பெயரிடுவது என்பதும் பெரும் கேள்வியாகின்றது.

ஈற்றில் பார்க்கின்றபோது, சனல்4 காணொளியால் அதிகாரம் யாரிடத்தில் மாற்றப்படப்போகின்றது. அதனை யார் தக்கவைத்தக் கொள்ளப்போகின்றார்கள் என்பது தான் பிரதான இடத்தினை பிடித்துள்ளது.

இதற்குள் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான நீதியை எதிர்பார்த்திருப்பதும், அரசியல் மேடைப் பேச்சுக்களை நம்பி பேராயர் உள்ளிட்டவர்கள் ஆணைகளை அள்ளி வழங்குவதும் தங்கள் கண்களை தாமே குற்றிக்கொள்வதற்கே சமனாக அமையும்.

# தியாக தீபம் திலீபனின் நினைவூர்திமீது தாக்குதல்
# சிங்களப் பேரினவாதக் கோரமுகத்தின் வெளிப்பாடு

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் கண்டனம்




தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தலை முன்னிட்டு தமிழர் தாயகத்தை வலம் வந்த நினைவூர்திமீது நடாத்தப்பட்ட தாக்குதல், சிங்களப் பேரினவாதத்தின் கோரமுகத்தை வெளிப்படுத்தி நிற்பதாக தெரிவித்துள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையம், ஸ்ரீலங்கா இராணுவமும் காவல்துறையும் இந்த தாக்குதலுக்கான பாதுகாப்பு மற்றும் காவல் ஏற்பாட்டை வழங்கியுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது. தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் ஊர்தி மீது நடாத்தப்பட்ட தாக்குதல் குறித்து கடும் கண்டனம் வெளியிட்டுள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையத்தின் விரிவான அறிக்கை வருமாறு:

**தியாக தீபத்தின் நினைவேந்தல்**

“இந்திய அரசுக்கு எதிராக ஐந்து அம்சக் கோரிக்கையை முன்னிறுத்தி தியாக தீபம் திலீபன் அவர்கள் 1987இல் உண்ணா விரதம் இருந்து தனது உயிரை ஈகம் செய்தார். செம்படம் 15ஆம் திகதி ஈழத்தில் தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தியாக தீபம் திலீபன் அவர்கள் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த யாழ்ப்பாணம் நல்லூர் வீதியிலும் பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், கிராமங்கள், நகரங்கள், அலுவலகங்கள், புலம்பெயர் தேசம், தமிழகம் என பல்வேறு இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

1987ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் திகதி ஈழத் தமிழ் மக்களின் அகிம்சை முகமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உன்னத போராளியாகவும் திகழ்ந்த திலீபன் அவர்கள் தொடங்கிய உண்ணா விரதப் போராட்டம், இந்திய அரசின் அநீதியான அணுகுமுறையினால், ஈழத் தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டத்திற்கு மதிப்பு அளிக்காமையினால் செப்டம்பர் 26ஆம் திகதியன்று திலீபன் அவர்கள் ஈக – வீர மரணம் அடைந்தார். இந்த நாள் ஈழத் தமிழ் மக்களின் விடுதலை வரலாற்றில் என்றும் மறக்க முடியாத எழுச்சி மிகு நாளாகவும் உருக்கம் மிகு நாளாகவும் இருக்கின்றது.







**திலீபன் நினைவு ஊர்தி**

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஒரு துளி நீரும் அருந்தாமல் பன்னிரு நாட்கள் பட்டினிப் போர் செய்த தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவுகளை தாங்கிய நினைவேந்தல் ஊர்தி வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தை சுற்றி வரும் ஏற்பாட்டை தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்திருந்தது. கடந்த ஆண்டும் இதேபோன்று நினைவேந்தல் ஊர்தியை வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் மக்கள் முன்னணி முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நினைவேந்தல் ஊர்தியை சிங்கள மக்களும், முஸ்லீம் மக்களும் வணங்கி தியாக தீபம் திலீபன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கைகளை தனது உன்னத போராட்டத்தின் வழியாக எடுத்துரைத்த தியாக தீபம் திலீபன் அவர்களின் அகிம்சைப் போராட்டத்தின் அறத்தை இளைய தலைமுறைக்கும் தென்னிலங்கை தேசத்திற்கும் உலகத்திற்கும் எடுத்துரைக்கும் விதமாக குறித்த நினைவேந்தல் ஊர்தி பவனியை தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்தது.

**ஊர்தி மீது பேரினவெறித் தாக்குதல்**

இந்த நிலையில் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்ட வாகன ஊர்தி ஈழத் தமிழர் தலைநகர் திருகோணமலையில் வருகை வந்த வேளையில் சிங்களப் பேரினவாதிகள் சிலர் அதன் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடாத்தியதுடன் குறித்த வாகனத்தில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அக் கட்சியின் முக்கியஸ்தர் சட்டத்தரணி காண்டீபன்மீதும் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சிங்கக் கொடிகளுடன் வந்த காடையர்கள், மிகவும் அநாகரிகமான முறையில் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். வாகனத்தை சேதப்படுத்தியதுடன், வாகனத்தில் பொருத்தப்பட்ட தியாக தீபம் திலீபன் அவர்களின் திருவுருவப்படத்தின் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளமை பெரும் கண்டத்திற்கு உரியதாகும். மக்கள் பிரதிநிதி ஒருவர்மீதே சிங்களப் பேரினவாதம் வீதியில் வைத்து இத்தகைள தாக்குதலை நடத்துகின்றது என்பதே ஸ்ரீலங்காவின் ஜனநாதயக முகத்தை உலகதிற்கு அம்பலம் செய்கின்றது. இதனை மிகவும் கடுமையாக கண்டிக்கின்றோம்.

**ஈழத் தமிழர் நிலை இதுவே**

இலங்கையில் ஈழத் தமிழர்களின் நிலை என்ன என்பதை தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் ஊர்தி மீது நடாத்திய தாக்குதலின் மூலமாக ஸ்ரீலங்கா அரசும் பேரினவாதிகளும் மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தி உள்ளனர். மக்கள் பிரதிநிதி ஒருவருக்கு வீதியில் வைத்து மிக அநாகரிகமாக அகௌரவமாக தாக்குதல் நடத்தப்படுகின்றது என்பது சாதாரண ஈழத் தமிழ் மக்கள் ஈழத்தில் ஸ்ரீலங்கா அரசின் ஆட்சியில் எப்படி வாழ்கிறார்கள் என்பதை உலகிற்கு எடுத்துரைத்துள்ளது.

இதேவேளை குறித்த காடையர்கள் தாக்குதலில் ஈடுபடுகின்ற வேளையில், ஸ்ரீலங்கா இராணுவமும் ஸ்ரீலங்கா காவல்துறையும் தடுக்காமல் வேடிக்கை பார்த்துள்ளது. அத்துடன் தாக்கியவர்கள்மீது தடுத்து தாக்குதல் எவற்றையும் மேற்கொள்ளாததுடன், தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் வாகனத்தில் பயணம் செய்தவர்கள்மீது தாக்குவதற்கு வசதியான வித்தில் நடந்து கொண்டுள்ளமையும் காணொளி பதிவுகளில் வெளியாகியுள்ளது.

**பின்னணியில் பேரினவாதம்**

கடந்த காலத்தில் தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தலை மேற்கொள்ள அனுமதிக்கக்கூடாது என்று போர்க்குற்றவாளியும் இனப்படுகொலையாளியும் முன்னாள் இராணுவக் கடற்படை அதிகாரியுமான சரத் வீரசேகரா எச்சரித்திருந்தார். அத்துடன் சிங்களப் பேரினவாதிகள் பலரும் தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தலை கண்டு பெரும் அச்சமும் எதிர்ப்பும் கொண்டு இருந்தனர். இதனால் இப்போது இடம்பெற்ற தாக்குதலின் பின்னணியிலும் அவர்கள் இருப்பதை நாம் குற்றம் சுமத்துகின்றோம்.



அத்துடன் இன்றைய அதிபர் ரணில் விக்கிரமிங்க உலகத்திற்கு நல்லவர் என்ற முகத்தை காட்டிக்கொண்டு பேரினவாதிகளை வளர்த்து வடக்கு கிழக்கில் ஈழத் தமிழ் மக்களை ஒடுக்கவும் அழிக்கவும் மிரட்டவும் ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறார். அண்மைய நாட்களில் குருந்தூர் மலையில் நடாத்தப்படட அட்டூழியங்களின் தொடர்ச்சியாகவே சிங்களப் பேரினவாத அரசும் பேரினவாதிகளும் திருகோணமலை மண்ணில் திலீபன் நினைவூர்திமீது தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

**மக்கள் புரட்சி வெடிக்கும்**

இந்த நிலையில் தாக்கப்பட்ட நினைவேந்தல் ஊர்தி குறித்த செய்தி ஈழத் தமிழ் மக்களின் மனங்களில் பெரும் கொதிப்பையும் எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. ஈழத்தின் புதிய தலைமுறைகள் தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவை இன்னமும் இறுக்கமாகப் பற்றிக் கொள்ளும் களவாய்ப்பை சிங்களப் பேரினவாதிகளின் தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை தாக்கப்பட்ட நினைவேந்தல் ஊர்தியும் புதிய ஊர்தியும் தொடர்ந்து தமிழர் தாயகத்தை வலம் வருகின்றது. இதுவே சிங்களப் பேரினவாதிகளுக்கான பதிலாகவும் எழுச்சியாகவும் இருக்கிறது.

தமிழீழ மக்களின் மனங்களில் பேரிடத்தை பிடித்துள்ள தியாக தீபம் திலீபன் அவர்கள்மீது சிங்கள மக்களும் பெரும் அன்பையும் பற்றையும் கொண்டுள்ளனர். அத்துடன் தற்போது சிங்களப் பேரினவாதிகள் தொடுத்த தாக்குதலின் ஊடாக சிங்கள மக்கள் மத்தியில் இன்னமு‘ திலீபன் பேசுபொருள் ஆகியுள்ளார். சிங்களப் பேரினவாதிளின் இத்தகைய செயற்பாடுகளே மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும் என்ற தியாக தீபம் திலீபன் அவர்களின் பொன்மொழியை வரும் காலத்தில் நிறைவேற்றிவிடும் என்பதை உறுதியுடன் கூறுகிறோம்.” என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.




**பூமிகன்**

சர்வதேச ரீதியில் பார்க்கும்போது, ஜி 20 நாடுகளின் பொருளாதாரம் உலகின் மொத்த உற்பத்தியில் 85 சதவீதமாகும். உலக வணிகத்தில் 80 சதவீதமாகும்.

உலக மக்கள் தொகை என்ற கோணத்தில்பார்த்தால், இந்த நாடுகள் மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டிருக்கிறது. வறுமை ஒழிப்பு முதல் பருவ நிலை மாறுபாடு காரணமாக ஏற்படும் ஆபத்துகள் என பல்வேறு பிரச்சினைகள் இந்தக் கூட்டமைப்பு கையாள்கின்றது.

இத்தனை விடயங்களை தன்னகத்தே கொண்டதும் சர்வதேச அளவில் மிக முக்கிய அமைப்பாகவும் திகழும் ஜி20 கூட்டமைப்பின் மாநாடு கடந்த 9ஆம் 10ஆம் திகதிகளில் டெல்லியில் நடைபெற்றது.

தலைவர்கள் ஒரே நேரத்தில் மலர் வளையம் வைத்து மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்தினர்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் பிராந்திய, சர்வதேச ரீதியில் அது முக்கிய மானதாக பார்க்கப்படுகின்றது. ஆகவே தான் இந்தியா இந்த மாநாட்டை மக்கள் இயக்கமாக மாற்றியது.

சுமார் 60 நகரங்களில் நடைபெற்ற 200இக்கும்மேற்பட்ட மாநாடுகளில் இலட்சக்கணக்கானோர் பங்கேற்றனர். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதில் இந்தியா உறுதியாக உள்ளமையை பல தருணங்களில் வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறிருக்கையில், ஜி20 உச்சி மாநாட்டில் 'ஒரே பூமி' என்ற தலைப்பில் உரையாற்றி பிரதமர் மோடி, உலகளாவிய பயோ எரிபொருள் கூட்டணி அமைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

தொடர்பாளர் எப்பா கலோண்டோ ஏற்கனவே கூறியிருந்தார். இந்நிலையில், தென்னாப்பிரிக்கா மட்டுமே ஜி20 இன் உறுப்பினராக இருந்த நிலையில்தான் தற்போது ஆப்ரிக்காவின் யூனியனின் கோரிக்கை நிறைவேறியுள்ளது.

இது, இந்தியாவுக்கு இராஜதந்திர ரீதியிலும் முக்கியமானதொரு விடயமாகின்றது. ஏனென்றால், சீனா ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய வர்த்தக நட்பு நாடு என்பதோடு அதன் மிகப்பெரிய கடன் வழங்கும் தரப்பக்களிலும் ஒன்றாகவுள்ளது.

இந்த நிலைமைகளைப் பயன்படுத்தி சீனாவினால் திட்டமிடப்பட்ட விரிவாக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகையில், ஜி20 அங்கத்துவத்தைப் பெற்றுக்கொடுத்து இந்தியா அதற்கு ஒட்டுமொத்தமாக கடிவாளம் இட்டிருக்கின்றது.

இந்தியா தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி, ரஷ்யா, பிரிட்டன், பிரேசில் உள்ளிட்ட 20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

முதன் நாளில் ஜி20 மாநாடு நடைபெறும் பாரத் மண்டபத்திற்கு வருகை தந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலைவர்களை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார். மிக முக்கியமாக இந்த மாநாட்டில் ஆப்பிரிக்க யூனியன் 21ஆவது உறுப்பு நாடாக ஜி20 கூட்டமைப்பில் இணைந்தமை மைல்கல்லாகும்.

மாநாட்டின் இரண்டாவது நாளில் ஜி20 நாடுகளின் தலைவர்கள், மகாத்மா காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர்.

சாரல் மழைக்கு நடுவே டெல்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்திற்கு ஜி20 நாடுகளின் தலைவர்கள் வருகை தந்தனர். அவர்களை பிரதமர் நரேந்திர மோடி சால்வை அணிவித்து வரவேற்றார்.

அதைத்தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் உள்ளிட்ட

எரிபொருள் கலப்பு விடயத்தில் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது தற்போதைய காலத்தின் தேவை என்று பிரதமர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை கண்காணிப்புக்கான ஜி20 செயற்கைக்கோள் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார்.

இவ்வாறான நிலையில், சர்வதேச நிதி அமைப்புகளை சீரமைக்க ஜி20 கூட்டமைப்பின் தலைவர்கள் ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

ஜி20 மாநாடு தீர்மானம் தொடர்பாக இந்திய சார்பில் அறிக்கையை வெளியிட்டு பேசிய அவர், ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலத்தை பகிர்ந்து கொள்வோம் என்பதே ஜி20 மாநாட்டின் தகவல் என்றார்.

இந்தியா தலைமையின் கீழ் ஆப்பிரிக்க யூனியன் ஜி20 அமைப்பின் நிரந்தர உறுப்பினரானது திருப்தியளிக்கிறது என்றும் அபிரிக்கா இந்தியாவுடன் துணையாக தொடர்ந்தும் செயற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆபிரிக்க ஒன்றியம் கடந்த ஏழு ஆண்டுகளாக ஜி20 அமைப்பில் முழு உறுப்பினராகுவதற்காக தொடர்ச்சியாக வாதிடுகிறது என்று அதன் செய்தித்

அதுமட்டுமன்றி, தற்போது ஆப்ரிக்க கண்டத்தின் இளம் மக்கள்தொகை 1.3 பில்லியன் ஆகும். இது 2050 இல் இரட்டிப்பாகும். மொத்த பூமியின் மக்களில் நான்கில் ஒரு பங்கைக் ஆப்ரிக்க மக்கள் கொண்டிருப்பர்.

இந்த நிலையில் ஜி20 குழுவில் ஆப்ரிக்கா இணைந்திருப்பதானது முக்கியமானதாகின்றது என்பதோடு ஆப்ரிக்காவின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் அங்கே உள்ள வளங்களை முறையாக பயன்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்கு ஜி20 உதவியாக இருக்கும் .

குறிப்பாக ஆபிரிக்காவுக்கான ஏற்றுமதிகள், புதைபொருள் ஆராய்ச்சி உள்ளிட்ட விடயங்களில் இந்தியா எதிர்வரும் காலத்தில் தனது விரிவாகத்தை முன்னெடுப்பதற்கு தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

அதேநேரம், மத்திய கிழக்கு நாடுகளை இந்தியா தன் பக்கம் ஈர்த்துள்ளது. ஜி20 மாநாட்டில அமெரிக்கா, இந்தியா, சவுதி அரேபியா மற்றும் பிற நாடுகளின் தலைவர்கள்; ரயில் மற்றும் துறைமுகங்கள் சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வளைகுடா மற்றும் அரபு நாடுகளை ரயில்வே நெட்வொர்க் மூலம் இணைக்கும் விதமாகவும், ஜி20யில் அருகருகே இருக்கும் நாடுகளை ரயில் மூலம் இணைக்கும் விதமாகவும், மற்ற நாடுகளை கடல் போக்குவரத்து மூலம் இணைக்கும் விதமாகவும் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் சீனாவின் ஒரேபாதை மற்றும் மண்டலம்(பி.ஆர்.ஐ) திட்டத்திற்கு போட்டித்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், ஜி20 மாநாட்டில், 37 பக்கங்களில், 83 பத்திகள் உள்ள புதுடில்லி பிரகடனம், ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. நீடித்த மற்றும் கடினமான பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதற்கு அமைவாக குறித்த பிரகடனம் மீது ஒருமித்த கருத்துடன் ஏற்கப்பட்ட சாதனையுடன் மாநாடு நிறைவடைந்துள்ளது.

அதன் பிரகாரம் குறித்த பிரகடனத்தில், 'இன்றைய யுகம், போருக்கானது அல்ல" என்பதை வலியுறுத்தியுள்ள இந்த பிரகடனம், சர்வதேச விதிகளை அனைத்து நாடுகளும் பின்பற்ற வேண்டும்; நாடுகளின் எல்லைகள் மற்றும் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும்; உக்ரைனில் விரிவான, ஸ்திரமான அமைதி திரும்ப வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

உக்ரைன் போர் தொடர்பாக, பிரகடனத்தில் உக்ரைன் விவகாரம் தொடர்பாக, இந்தோனேஷியாவின் பாலியில் நடந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதை நினைவு கூர்கிறோம். ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் மற்றும் ஐ.நா., பொது சபையில், இந்த விவகாரம் தொடர்பான தீர்மானங்களில் அந்தந்த நாடுகள் எடுத்த நிலைப்பாடுகளை மதிப்போம். இந்த விவகாரத்தில், ஐ.நா.,வின் கொள்கைகளை அனைத்து நாடுகளும் முழுமையாக பின்பற்றுவோம்.

ஜி20 மாநாட்டில், பெண்கள் முன்னேற்றத்திற்காக புதிய செயற்குழு அமைக்க ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொருளாதார வளர்ச்சிக்கான முடிவுகள் எடுக்கும் இடத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் தரவும், அதன்படி, பாலின இடைவெளியை குறைத்து சமமான வாய்ப்புகளை வழங்கி பெண்களை ஊக்குவிக்கவும் வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், பசுமை இல்ல வாயுக்கள் வெளியிடுதலை 2030க்குள் 43 சதவீதம் அளவுக்கு குறைக்க கவனம் செலுத்த வேண்டும் என்றும், அணு ஆயுதம் பயன்படுத்துவதையோ, அணு ஆயுத தாக்குதல்தொடர்பாகமிரட்டுவதையோ ஏற்க முடியாது என ஜி20 மாநாட்டில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை தயாரித்துள்ளதாக அறிவித்த வடகொரியாவுக்கு ஜி20 நாடுகள் கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், சந்திரயான்3 திட்ட வெற்றிக்காகவும் உறுப்பு நாடுகள் சார்பில் இந்தியாவுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில், இந்தியா அமெரிக்கா ஐரோப்பா பொருளாதார ஒப்பந்தம், காலநிலை மாற்றத்திற்கான அறிக்கை, உக்ரைன் ரஷ்யா போருக்கு எதிரான அறிக்கை என்று பல விடயங்கள் சாதமான முடிவுகளை வெளிப்படுத்தியுள்ள நிலையில் ஒட்டுமொத்தமாக ஜி20 மாநாடு இந்தியாவிற்கான வெற்றியாக பார்க்கப்படுகிறது.

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி உண்மைகள் வெளிவருமா?

**தாயகன்**

சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட இனஅழிப்பினை மீண்டும் உறுதிப்படுத்துவதாக இருப்பது தமிழர் தாயகத்தில் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் மனிதப் புதைகுழிகள் தான்.

சிறிலங்காவின் தென்பகுதியில் அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளைச் செய்மையால் அவற்றை அடக்குவதற்காக குருநாகல், கம்பஹா, கொழும்பு, மாத்தறை, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும் மனிதப் புதைகுழிகள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனால் தமிழர் தாயகத்தில் மனிதப்புதைகுழிகள் திட்டமிட்ட இனஅழிப்பினை செய்யும் ஒரே நோக்குடன் தான் 1983ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் உருவாக்கப்பட்டுள்ளன என்பது முக்கியமான விடயமாகின்றது.

யாழ்.மாவட்டத்தில் மட்டும் துரையப்பா விளையாட்டு அரங்கம், கிருசாந்திப் படுகொலையுடன் தொடர்ச்சியாக கண்டறியப்பட்ட செம்மணி மனிதப் புதைக்குழி, மிருசுவில் மனிதப் புதைக்குழி ஆகியன இதுவரையில் கண்டறியப்பட்டுள்ளன.

அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தில் கணேசபுரம் மனிதப் புதைக்குழி, மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைக்குழி, ச.தோ.ச வளாக மனிதப்புதைகுழி ஆகியன காணப்படுகின்றன.

இவற்றைவிடவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மனிதப் புதைக்குழி, தற்போது கண்டறியப்பட்டுள்ள கொக்குத்தொடுவாய் மனிதப்புபுதைகுழி ஆகியன காணப்படுகின்றன.

தமிழர் தாயகத்தின் வடபுலத்தினை விடவும், கிழக்கில் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் காணப்படுவதோடு. வடக்கு, கிழக்கில் இன்னும் அடையாளப்படுத்தப்படாத நிலையில் எத்தனை மனிதப்புதைகுழிகள் காணப்படுகின்றன என்பது தொடர்பில் எவ்விதமான தரவுகளும் இல்லை.

ஆனால், தற்போதைய நிலையில் வடக்கு, கிழக்கில் 10வரையான மனிதப்புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவற்றின் எண்ணிக்கை எதிர்காலத்தில் நிச்சயமாக அதிகரிக்கப்போகின்றது என்பது உறுதியான விடயமாகின்றது.

அதேநேரம், இதுவரையில் கண்டறியப்பட்ட எந்தவொரு மனிதப்புதைகுழிகள் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கம் முழுமையான அகழ்வாராய்ச்சிகளைச் செய்து, உண்மைகளைக் கண்டறிந்து, காரணமானவர்களை சட்டத்தின் முன்னிறுத்தி நீதியை நிலைநாட்டி பொறுப்புக்கூறியதாக முன்னுதாரணம் கூறுமளவிற்கு எந்தவொரு பதிவுகளும் இல்லை.

இந்த நிலையில் தான் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் மனிதப்புதைகுழி கண்டறியப்பட்டு பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டின் கடந்த ஜூன் 29ஆம் திகதி நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர், குடிநீர் குழாய்களை புதைப்பதற்காக நிலத்தை தோண்டிய போதே, கொக்குத்தொடுவாயில் முதலில் மனித எலும்பு எச்சங்கள் வெளிப்பட்டன.

பெண் போராளிகளினதென சந்தேகிக்கப்படும், உடைகள், உள்ளாடைகளுடன் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டதை அடுத்து, இந்த விவகாரம் முல்லைத்தீவு நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அதன் பின்னர், நீதிவான் சம்பந்தப்பட்ட இடத்தைப் பார்வையிட்டு, ஜூலை 6ஆம் திகதி அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய கடந்த 6ஆம் திகதி வியாழக்கிழமை நீதிவான், சட்டவைத்திய அதிகாரி உள்ளிட்டவர்களின் மேற்பார்வையில் 7 மீற்றர் நீளமும், 2 மீற்றர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் அழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணிகளின் போது, தடயங்களைச் சேகரிப்பதற்கான எந்தவிதமான நியமங்களும் பின்பற்றப்படவில்லை. ஆகக்குறைந்தது, கையுறைகளை அணிந்து தடயப்பொருட்களைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் கூட முன்னெடுக்கப்படவில்லை.

இந்த அகழ்வுப் பணிகள் ஒன்பது நாட்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் தற்பொது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், குறித்த அகழ்வின்போது 17மனித எலும்புக்கூட்டுத்தொகுதி முழுமையாக அகழப்பட்டுள்ளதோடு பெண் போராளிகளதென சந்தேகிக்கப்படும் ஆடைகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் படை அடையாளப்படுத்தும் மூன்று தகடுகள், சயனைற் குப்பி ஒன்று, ரஷ்ய தயாரிப்பான நீர்ச்சுத்திகரிப்பு குழாய் ஒன்று ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

இறுதிநாள் அகழ்வு பணிகள் முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.கங்காதரன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டதோடு; எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தின் 3ஆம் வாரமளவில் அகழ்வுப்பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா உறுதிப்படுத்தியிருக்கின்றார்.





ஆக, மீண்டும் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் தொடரும் என்பது உறுதியாகின்ற நிலையில் அச்சமயத்திலும் மனித எச்சங்கள் உட்பட மேலும் பல சான்றுப்பொருட்கள் மீட்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் தற்போதைய நிலையில் பெண்களின் உடலெச்சங்கள் தான் அதிகமாக மீட்கப்பட்டுள்ளன. எனினும், அதில் ஆண்களினது எச்சங்களும் காணப்படலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி 17மனித எலும்புக்கூட்டுத்தொகுதிகளில் 13ஒரே இடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த மனிதப்புதைகுழி பல்வேறு சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

1984ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் தகதி கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, குமுழமுனை, அலம்பில் ஆகிய கிராமங்களில் 31பெண்கள், 21 குழந்தைகள் உள்ளிட்ட 131 தமிழர்கள் சிறிலங்கா அரச படைகளால் காட்டுமிராண்டித்தனமாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி இக்கிராமங்களில் இருந்தும் வவுனியா வடக்கின் நெடுங்கேணி தெற்குப் பகுதியில் இருந்த கிராமங்களில் இருந்தும், ஒரே இரவில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உடுத்த உடையுடன் குறுகிய கால அறிவிப்பில் சிறிலங்கா படைகளால் வெளியேற்றப்பட்டனர்.

பின்னர் மேற்படி கிராமங்கள் அனைத்தையும் சிறிலங்கா படைகள் ஆக்கிரமித்திருந்ததோடு சிங்களக் குடியேற்றங்களும் விஸ்தரிக்கப்பட்டன. இந்தப் பின்னணியில், 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி, கொக்கிளாய் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலை முன்னெடுத்தனர்.

திட்டமிட்டபடி தாக்குதல் நடத்தப்பட்டாலும் விடுதலைப்புலிகளால் கூறுமளவிற்கு வெற்றியைப் பெறமுடிந்திருக்கவில்லை. அதேநேரம், சிறிலங்கா இராணுவத்துக்கு சேதங்கள் இருந்தாலும், விடுதலைப்புலிகளின் தரப்பில் பாதிப்புக்கள் அதிகமாக இருந்தன. இதனையடுத்து, மணலாறு வெலிஓயா ஆக்கப்பட்டதோடு, அங்கே முன்னெடுக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், கொக்குத்தொடுவாய் பிரதேசம் சிறிலங்கா இராணுவத்தின் முன்னரங்க காவல் நிலையமாக மாற்றப்பட்டது.

இதனையடுத்து 2008ஆம் ஆண்டு வன்னியின் மேற்குப் பகுதியில் 57, 58 ஆவது படைப்பிரிவுகள் மேற்கொண்ட படைநகர்வைப் போலவே, கொக்குத்தொடுவாய் தொடக்கம், முல்லைத்தீவு நோக்கி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த தலைமையிலான 59ஆவது பிரிவு படை நடடிவக்கையைச் செய்தது.

இந்தப் படை நடவடிக்கையானது, இறுதிப்போரின்போது முன்னெடுக்கப்பட்ட முக்கிய படை நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகின்றது. ஆகவே இதன்போதும் சிறிலங்கா படைகள் மிலேச்சத்தமான தாக்குதல்களைச் நிகழ்த்தியமைக்கான ஆதாரங்கள் இன்றும் உள்ளன.

அந்த வகையில் மேற்படி சந்தர்ப்பங்களின்போது, விடுதலைப்புலிகளின் உடல்கள் அங்கே புதைக்கப்பட்டிருக்கலாம் என்றொரு சந்தேகம் இயல்பாக எழுகின்றது. ஆனால், இலங்கை தமிழரசுக்கட்சியின் அங்கத்தவரும், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான துரைராசா ரவிகரன் முக்கியமான சந்தேகத்தினை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக, தற்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது உறவுகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இந்நிலையில் இறுதிக்கட்டப் போர் இடம்பெற்றபோது இராணுவத்திடம் சரணடைந்து, தற்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களாகத் தேடப்படுபவர்கள், குறித்த கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என்ற சந்தேகம் இங்குள்ள பலருக்கும் இருக்கின்றன என்று குறிப்பிடுகின்றார்.

அதுமட்டுமன்றி, இந்த மனிதப் புதைகுழி முற்று முழுதாக அகழ்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன், இந்த மனிதப் புதைகுழி தொடர்பான உண்மைத் தன்மை வெளிவரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடகவிருக்கின்றது. அத்தோடு சர்வதேச நாடுகள் இந்த மனிதப் புதைகுழி தொடர்பான விடயத்தில் தலையிட்டு, இந்த மனிதப் புதைகுழி விவகாரத்தில் இலங்கை அரசின் பொறுப்புக் கூறலுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகின்றார்.

அவ்வாறிருக்கையில், நிலைமாறுகால நீதிப்பொறிமுறையை முன்னெடுக்கும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக மார்பு தட்டுகின்ற சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறான மனிதப் புதைகுழிகள் உள்ளிட்ட விடயங்களில் உண்மைகளை கண்டறியவற்காக நிறுவியுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை கண்டறிவதற்கான அலுவலகத்தை ஸ்தாபிக்கவில்லை என்பது முக்கியமான விடயமாகின்றது.

ஈராக் 2006இல் பாராளுமன்றம் பாரிய மனிதப் புதைகுழிகளைப் பாதுகாக்கும் சட்டமொன்றை நிறைவேற்றியது. இது மனித உரிமைகள் அமைச்சுக்குப் பாரிய மனிதப் புதைகுழியிலிருந்து உடல்களைத் தோண்டியெடுத்தல், மற்றும் குற்றவியல் வழக்குத் தொடரல்களில் பயன்படுத்தப்படக்கூடிய சான்றுகள்குறித்த ஆவணப்படுத்தல் பொறுப்புகளை வழங்கியது.

அமைச்சு நீதிமன்ற முறைமையுடனும், வழக்குத் தொடுநர் அலுவலகத்துடனும், சட்ட மருத்துவ நிபுணர்களுடனும், ஏனையோருடனும் கூட்டாகப் பணியாற்றியது. அச்சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட குறியிலக்குகள் பாரிய புதைகுழிகளின் பாதுகாப்பு, பலியானோர் மற்றும் குற்றமிழைத்தோரை இனங்காணுதல், குற்றவியல் வழக்குத் தொடரல்களுக்கு இட்டுச்செல்லக்கூடிய சான்றுகளைத் திரட்டுதல் மற்றும் இத்தகைய சான்றுகளை நீதிமன்றங்களுக்கு வழங்குதல் என்பவையாக அமைந்திருந்தன.

ஆனால், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை கண்டறிவதற்காக நிறுவப்பட்டுள்ள அலுவலகமானது, நீதிவான் நீதிமன்று ஆட்புல நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் அதேவேளையில், பாரிய புதைகுழிகளைத் தோண்டி, உடல்களை வெளியே எடுப்பதற்கான தனிப்பொறுப்பைக் கொண்டதும், விசாரணைகளுக்காக தற்போதைய மற்றும் எதிர்காலக் கல்லறையிடங்களையும் பாதுகாப்பாகக் கட்டுப்படுத்துவதுமான ஓர் அர்ப்பணிப்பஉவுணர்வுகொண்ட, சட்ட மருத்துவ அலகை அல்லது அணியை வைத்திருத்தல் வேண்டும் என்ற விடயத்தை கருத்தில் கொண்டிருக்கவே இல்லை என்பது சிறிலங்கா அராசங்கத்தின் பொறுப்புக்கூறல் மீதான கரிசனையின்மையை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில், கொக்குத்தொடுவாயில் மீட்கப்படும் மனித எலுப்புக்கூட்டுத்தொகுதி உட்பட அனைத்து சான்றாதாரங்கள் தொடர்பிலும் சர்வ தேச பிரசன்னத்துடனான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே உண்மைகள் வெளியாகுவதற்கு குறைந்த பட்ச ஏது நிலைகள் உள்ளன.




**பார்த்திபன் சண்முகநாதன்**

"பெருந்தோட்ட மக்களுக்கு வீடமைப்பிற்கு 20 பேர்ச் காணி விவசாயத்தில் ஈடுபட 2 ஏக்கர் காணி" வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தற்போது மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வலுப்பெற்றுள்ளது. மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கும் காணியுரிமை, வீட்டுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இன்று நேற்று எழுந்த ஒன்றல்ல. தேர்தல்கள் காலங்களில் அரசியல்வாதிகளால் அவர்களின் வாக்கு வங்கிளை நிரப்பிக்கொள்ளும் நோக்கில் முன்வைக்கப்படும். தேர்தல் முடிந்ததும் அந்த வாக்குறுதிகள் காலாவதியாகிவிடும். பின்னர் அடுத்த தேர்தலில் அந்த வாக்குறுதி மீண்டும் உயிர்த்தெழும். பின் மீண்டும் மரணிக்கும். அதேபோல் சிவில் சமூகத்தினர், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அவ்வப்போது ஏதாவது சர்வதேச தினங்களில் இந்த கோரிக்கை வலியுறுத்தி போராட்டங்கள், கலந்துரையாடல்களை முன்னெடுப்பார்கள். எனினும் அதற்கு அரசாங்கமோ அல்லது மலையக அரசியல் தலைவர்களோ எவ்வித பதிலையும் வழங்காது கண்டும் காணாதது போல் இருப்பர்.

ஆனால் தற்போதைய சூழலில் இந்த கோரிக்கை வலுப்பெற்றமைக்கு வலுவான இரண்டு சம்பவங்கள் அடித்தளமாக அமைந்துள்ளன.

சில வாரங்களுக்கு முன் மாத்தளை, ரத்வத்தை கீழ்ப்பிரிவு தோட்டத்தில் குடியிருப்பாளர் ஒருவரின் வீடு அடாவடித்தனமாக தோட்ட நிர்வாகத்தால் அடித்து உடைக்கப்பட்ட சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியடைச் செய்தது. அந்த சம்பவத்தின் சூடு தனிவதற்குள் இரத்தினபுரி, வெள்ளந்துர தோட்டத்தில் தொழிலாளி ஒருவரின் மகனால் அமைக்கப்பட்ட வீடு தோட்ட நிர்வாகத்தால் அடித்து நொறுக்கப்பட்டது. இந்த இரு சம்பவங்களுக்கும் எழுந்த கண்டனங்களின் ஊடாகவே, மலையக பெருந்தோட்டத் தமிழ் மக்களுக்கான காணி உரிமை குறித்த கோரிக்கையும் வலுப்பெற ஆரம்பித்துள்ளது.

"தோட்டத்தில் தற்போது வேலை செய்யாத எவருக்கும் புதிய குடியிருப்புகளை தர முடியாது என்பதே தோட்ட நிர்வாகத்தின் நிலைபபாடு. அதற்கான அதிகாரம் தமக்கு இல்லை என்றே தோட்ட நிர்வாகம் கூறிகிறது.

தோட்டக் காணிகள் தொடர்பான புதிய சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து பழைய சட்டமூலங்களை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களோ தோட்ட நிர்வாகத்திடம் தமது கோபத்தை வெளிப்படுத்தி மக்களை திசை திருப்புகின்றனர்." என சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை வெறுமனே வெளியாகவில்லை. மாறாக மலையக மக்களின் பிரதிநிதிகள் குறித்த இரு சம்பவங்களின் பின்னரும் நடந்துகொண்ட விதத்தை வைத்தே இந்த கருததை அந்த அமைப்பு வெளியிட்டிருந்தது. அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறித்த இரு சம்பவங்களும் இடம்பெற்று ஒரு நாளுக்கும் களத்திற்கு விஜயம் செய்திருந்தார். எனினும் அவர் அங்கு சென்று தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். ஏன் தோட்ட அதிகாரிகளை தாக்குவதற்குக் கூட முயற்சித்தார். இந்த சம்பவம், ஒரு மக்கள் பிரதிநிதியாக அவர் பக்க நியாயத்தை வலியுறுத்தினாலும், மறுபுறம் இந்த கோபத்தால் என்ன நடந்து விடப்போகிறது என்பதே சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் கேள்வியாக அமைந்துள்ளது. உணர்ச்சிகளை அடக்கி சட்ட ரீதியாக மலையக மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்த வேண்டுமென அந்த அமைப்பு கோரியுள்ளது.

"மலையக மக்களுக்கெதிரான பாரபட்சமான சட்ட மூலங்களை மாற்றி நாட்டின் ஏனைய பிரஜைகள் போலவே வீட்டுரிமை காணியுரிமை கொண்ட சமூகமாக மலையக மக்களின் நிலையை மாற்றுவதற்கு அரசியல்வாதிகளை நம்பி பிரயோசனம் இல்லை என்பதே இதிலிருந்து புரிகிறது. ஆகவே, மலையக மக்கள் இனியாவது தமது உரிமைக்கான ஒன்று படுவதும் ஏனைய முற்போக்கு அமைப்புகளுடன் இணைந்து தமது உரிமைக்கான போராடுவதுமே எம் முன்னுள்ள தீர்வாகும். 200 வருடங்களாக உரிமைகளற்று ஒடுக்கப்படும் மலையக மக்கள் இனியாவது விழித்துக் கொள்வதும் ஒற்றுமையுடன் அமைப்பாவதும் அவசியமாகும்." என அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

### அமைச்சரவைத் தீர்மானம்

பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்கப்பட வேண்டும் என அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பதிரண கடந்த ஜூலை மாத இறுதியில் தெரிவித்திருந்தார்.

"பெருந்தோட்ட மக்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க நிதிவசதி இல்லாமை காணி பகிர்வு விடயத்தில் தாமதம் ஏற்பட ஒரு காரணமாகும். இந்த நிலையில், வீடமைப்பு திட்டத்திற்காக நிதி வசதிகள் இல்லாவிட்டாலும் 10 பேர்ச் காணிகளை பெருந்தோட்ட மக்களுக்கு வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தம்மிடம் உள்ள நிதி அல்லது கடன் பெற்றாவது வீடுகளை நிர்மாணித்துக்கொள்வதற்கு பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும். இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அவதானத்துடனும் உணர்வு பூர்வமாகவும் செயற்பட்டு வருகின்றார். இதேவேளை, தோட்டத்தில் வேலை இல்லை என்பதற்காக லயன் அறைகளில் இருந்து மக்களை வெளியேற்ற முடியாது. காணி உரிமம் வழங்கப்படும் பட்சத்தில் கடன் மூலமாகவோ அல்லது வேறு வழிகளில் வீடொன்றை அரசாங்கம் நிர்மாணித்து கொடுக்கும். 1991ஆம் ஆண்டு பெருந்தோட்டத்துறையை தனியாருக்கு வழங்கிய போது சுமார் நான்கு இலட்சத்து 50,000ற்கும் அதிகமான தொழிலாளர்கள் காணப்பட்டனர். ஆனால், தற்போது 150,000 தொழிலாளர்கள் மாத்திரமே எஞ்சியுள்ளனர்.

பெருந்தோட்ட துறையை பாதுகாக்க வேண்டுமானால் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் முதலில் பாதுகாக்கப்பட வேண்டும்" என்றார் அவர்.

எனினும் இந்த அமைச்சரவை எப்படி செயற்படுத்தப்படப்போகிறது? பயனாளிகள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படப்போகின்றார்கள்? எப்போது இந்த திட்டம் ஆரம்பிக்கப்படும் போன்ற விடயங்களை அவர் இது வெளிபபடுத்தவில்லை.

### சட்டத்தரணி சுகுமாரன் விஜயகுமாரின் ஆய்வு என்ன சொல்கிறது?

இந்த நிலையில், "1972 ஆம் ஆண்டு 01ஆம் இலக்க காணி சீர்திருத்த ஆணைக் குழு சட்டத்தின் பிரிவு 3(3) இன் பிரகாரம் பெருந்தோட்டங்களில் லயன் வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு 20 பேர்ச்சஸ் அளவிலான காணி ஒதுக்கப்படுவதனை உறுதி செய்துள்ளது. எனினும், தற்போதைய அரசாங்கம் மலையக மக்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 10 பேர்ச்சஸ் துண்டு அளவான காணியை மாத்திரம் வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக அறிய முடிகிறது. நாட்டில் காணி இல்லாத பிரஜைகளுக்கு காணி வழங்குவதற்காக காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (1935), அரச காணிகள் கட்டளை சட்டம் (1947), காணி கையளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1979), காணி சீர்திருத்த ஆணைக்குழு சட்டம் ஆகிய சட்டங்கள் ஊடாக அனுமதிப்பத்திரம் (permit) அளிப்புப் பத்திரம் (grant) மற்றும் அறுதியீட்டு உறுதியூடாக (deed of transfer) காணி உரிமை வழங்கப்படுகிறது." என்கிறார் சட்டத்தரணி சுகுமாரன் விஜயகுமார்.

மலையக மக்களுக்கு இந்தச் சட்டங்களில் ஏற்புடைய சட்டங்களைப் பயன்படுத்தி அனுமதிப்பத்திரமோ, அளிப்புப் பத்திரமோ, அறுதியீட்டு உறுதியோ இதுவரை வழங்கப்படவில்லை என அவர் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

"நாட்டில் காணி அற்ற பிரஜைகள் உரிய அரச அதிகாரிகள், அரசு நிறுவனங்களின் மூலம் மற்றும் காணி கச்சேரி ஊடாக தெரிவு செய்யப்படுகின்றனர். எனினும், மலையக மக்கள் தொடர்பில் பெருந்தோட்ட கம்பனிகளும் பெருந்தோட்ட கம்பனிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியமும் (PHDT – Trust) தொழிற்சங்கங்களும் தீர்மானங்களை மேற்கொள்கின்றன. நாட்டில் காணி அற்ற பிரஜைகளுக்கு வழங்கப்பட வேண்டிய அரச காணிகள் எது என்பதை காணி அமைச்சு, காணி சீர்திருத்த ஆணைக்குழு, வீடமைப்பு அதிகார சபை, காணி ஆணையாளர், மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் போன்ற அரசு நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். எனினும், பெருந்தோட்ட கம்பனிகளும் பெருந்தோட்ட கம்பனிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியமுமே மலையக மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளைத் தெரிவு செய்கின்றன." என்கிறார் அவர்.

"சபரகமுவ, தென், மேல், ஊவா, மத்திய, வட மேல் மாகாணங்களில் உள்ள பல ஹெக்டயர் அளவான பெருந்தோட்டக் காணிகள் சகோதர சிங்கள மக்களுக்கு அரச நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம், அளிப்புப் பத்திரம், அறுதியீட்டு உறுதி ஊடாக வழங்கப்பட்டுள்ளன. எனினும், மலையக மக்களுக்கு பெருந்தோட்ட காணிகளை வழங்குவதற்கு மாத்திரம் பெருந்தொட்ட கம்பனிகளுக்கும் அரசு நிறுவனங்களுக்கும் இடையே காணப்படுகின்ற குத்தகை ஒப்பந்தம் காரணமாக காட்டப்பட்டு காணி உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. அத்தோடு, பெருந்தோட்ட கம்பனிகளுடன் எவ்வித தொடர்புமற்ற காணி சீர்திருத்த ஆணைக்குழு, JEDB, SLSPC, TRI ஆகிய அரச நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் கட்டுப்பாட்டில் உள்ள பெருந்தோட்டக் காணிகளை அவற்றில் வாழும் மலையக மக்களுக்கு குடியிருப்புத் தேவைக்காக அனுமதிப்பத்திரம், அளிப்புப் பத்திரம், அறுதியீட்டு உறுதி ஊடாக வழங்குவதற்கு இதுவரையில் எந்த விதமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை." என்ற விடயத்தை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

"அரச ஆவணங்களுக்கு அமைய ஏறத்தாழ 103,000 ஹெக்டயார் அளவிலான பெருந்தோட்ட காணிகள் பயன்படுத்தப்படாத காணிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், மலையக மக்களுக்கு ஒரு குடும்பத்துக்கு 20 பேர்ச்சஸ் என்ற அளவு காணியை மற்றும் ஏனைய சமூகத் தேவைகளுக்காக காணிகளை வழங்கி புதிய குடியிருப்புகளை ஏற்படுத்தி கிராமங்களாக மாற்றுவதற்கு வெறும் 20,000 ஹெக்டயருக்கும் குறைவான காணியே தேவைப்படுகின்றது. ஏனைய பிரஜைகளுக்கு விவசாய மற்றும் இதர தொழில் முயற்சிகளுக்காக அரச காணிகள் வழங்கப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டு அப்பிரஜைகளின் பொருளாதார ஸ்திரத்தின்மையும் நாட்டின் பொருளாதாரத்திற்கு அவர்களின் பங்களிப்பும் உறுதி செய்யப்படுறது. எனினும், மலையக மக்களுக்கு விவசாய மற்றும் இதர தொழில் முயற்சிகளுக்காக காணி வழங்கப்படுவதில்லை. அத்தோடு, பெருந்தோட்டக் காணிகளை பெருந்தோட்டங்களுக்கு வெளியில் உள்ளவர்களுக்கு வழங்குவதற்கான கொள்கையே ஆட்சியாளர்களால் முன்வைக்கப்படுகின்றது.

"எமது நாட்டில் பிரஜைகளுக்காக குடியேற்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டு புதிய கிராமங்கள் அமைக்கப்படும் போது ஏனைய எல்லா காரணிகளுக்கும் அப்பால் பிரஜைகளின் குடும்ப பாதுகாப்பு, நலன், பொருளாதார சுபிட்சம் என்பனவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

"எனினும், மலையக மக்களுக்கு குடியிருப்புக்காக காணி வழங்கப்படும் போது மாத்திரம் நம் மக்களின் உழைப்பால் உருவாக்கப்பட்ட தேயிலைச் செடிகளுக்கும் ரப்பர் மரங்களுக்கும் அம்மக்களை விட அதிக மதிப்பு வழங்கப்பட்டு தேயிலைச் செடிகளையும் ரப்பர் மரங்களையும் காப்பாற்றுவதாக கூறி அவர்கள் தொடர்ந்து லயங்களிலேயே வாழ்வது உறுதி செய்யப்படுகிறது அல்லது மனிதர்கள் வாழ பொருத்தமற்ற காணிகளில் குடியேற்றப்படுதல் இடம்பெற்று வருகிறது.

# ஊடகவியலாளர் அஸ்வின் நினைவேந்தலும் புலமைப்பரிசில் வழங்கலும்




மறைந்த ஊடகவியலாளரும் கேலிச்சித்திர கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் ஞாபகார்த்த ஊடக கற்கை மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாணத்தில் இம் மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் மாலை 3.30 மணியளவில் ஊடக அமைய தலைவர் கு. செல்வக்குமாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதலில் அஸ்வின் திரு உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறைத்தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.ரகுராம். ஊடக விரிவுரையாளர் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் மற்றும் யாழ். ஊடக மையத்தின் தயாபரன் ஆகியோரினால் அஸ்வினின் ஞபகார்த்த உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இறுதியாக அஸ்வினின் குடும்பத்தினரால் வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஊடக கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

ஈழநாடு பத்திரிகையில் தனது ஊடகப்பயணத்தை ஆரம்பித்த அஸ்வின் வலம்புரி, சுடரொளி, வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளில் தனக்கான முத்திரிகைகளை பதித்துள்ளார். அதேவேளை வீரகேசரியின் யாழ்.ஓசை பதிப்பின் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

இதில் இவர் எழுதிய கேட்டியளே சங்கதி என்ற பத்தி எழுத்து பல இடங்களிலும் எதிரொலித்தது. அந்த எழுத்துகள் ஓர் மௌனப் புரட்சியையும் செய்தது.

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் சிறந்த ஊடகவியலாளர் விருதை கேட்டியளோ சங்கதி பத்திக்காக வழங்கிக் கௌரவித்தது.

இறுதியாக தினக்குரல் பத்திரிகையில் இவர் வரைந்த கருத்தாழமிக்க கார்ட்டூன்கள் வாசகர்களை மட்டுமின்றி அரசியல் தலைவர்களையும் பேசவைத்தது.

அவரது காட்டூன்கள் பல இன்றைய காலத்திற்கும் பொருத்தமான தீர்க்கதரிசன ஓவியங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.










நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த அவசர மருத்துவ உதவி தேவைப்படும் இரு குடும்பங்களிற்கு உதவித்தொகை வழங்கி வைக்கப்பட்டது.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் சசிகரன் மேரியூலினா அவர்களின் நிதிப் பங்களிப்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஒருவருக்கும் மாயவனூரைச் சேர்ந்த ஒருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கி வைப்பட்டன.